
உலக மெய்யியல் தின ஆய்வுத் தொடர்-1

# The Turning Point of Philosophy: Philosophy of Language

# மெய்யியலின் திருப்புமுனை: மொழி மெய்யியல்




கலாநிதி M.S.M. அனஸ்

முன்னாள் பேராசிரியர்

மெய்யியல் துறை

பேராதனைப் பல்கலைக்கழகம்

தத்துவம் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

2024

## துறைத் தலைவர் உரை

இன்றைய மெய்யியல் உரையானது மிகவும் முக்கியத்துவம் உடையதாகும். மெய்யியல் போக்கில் ஏற்றபட்ட மாற்றம் மாத்திரமின்றி மெய்யியலின் புதிய வடிவமாகவும் மொழி மெய்யியல் காணப்படுகிறது. இது பற்றிய படைப்புக்கள் தமிழில் வருவது மிகவும் குறைவு. இது சார்பான தேடல்களில் ஈடுபடுவோரும் அருமை. இலங்கையைப் பொறுத்தவரை மேலைத்தேய மெய்யியல் சிந்தனை பற்றிய ஆழ்ந்த அறிவுள்ளவர்கள் மிகச் சிலரே. அவர்களுள் பேராசிரியர் அனஸ் அவர்கள் தனித்துவமான குறிப்பிடத்தக்க ஒருவர். பாரம்பரிய மெய்யியல் பரப்பில் மாத்திரமல்லாமல் அனேகமான துறைகளில் ஈடுபாடுடையவராக இவர் காணப்படுகின்றார் என்பது அத்துறையில் ஈடுபாடுள்ள அனைவருக்கும் தெரிந்த விடயம். கா.வே. காசிநதன், பேராசிரியர் சோ. கிருஸ்ணராஜா, பேராசிரியர் M.S.M. அனஸ் முதலியோர் இத்துறையில் தடம்பதித்தவர்கள். இலங்கையில் இன்னும் தனது மெய்யியல் ஆக்கப்பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர் பேராசிரியர் M.S.M. அனஸ் அவர்கள். இவர் மொழி மெய்யியலில் ஆழமான அறிவு கொண்டவர் என்பதனை இவ்வுரை பறைசாற்றுகிறது.

மெய்யியல் வரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு எண்ணக்கருக்கள் பிரதானமானதாக இருந்துள்ளன. சமகாலத்தில் மொழி என்பது பிரதான விடயமாக மெய்யிலில் ஆராயப்பட்டது. மெய்யியலாளர்களால் மொழி பற்றி ஆங்காங்கே ஆராயப்பட்டாலும் 19ம் நூற்றாண்டு வரைக்கும் அது ஒரு சுயமானதும் தனித்துவ முறைமைப்பட்ட கற்கையாக உருவாகவில்லை. எனவே மெய்யியல் சிந்தனை வரலாற்றில் வெளிவந்த எண்ணக்கருக்களுள் காலத்தால் பிந்தியது மொழி மெய்யியலாகும். எனினும் இது பற்றிய அடிப்படைகள் புதியவை அல்ல என்பது பொதுவான ஏற்றுக்கொள்ளுகை. மேலைத்தேய மெய்யிலின் ஆரம்ப காலமளவிற்கு மொழி மெய்யியல்சார் விடயங்கள் பழமையானது. பிளேட்டோவினது கிராட்டிலஸ் மற்றும் சோபிஸ்டு (*Cratylus and Sophist*) அரிஸ்ரோட்டிலது வியாக்கியானம் (*De interpretation*) முன் பகுப்பாய்வு (*Prior Analysis*) முதலியன மொழி பற்றிய ஆரம்ப சிந்தனைகள் எனலாம். பேட்டன் ரஸலின் பங்களிப்பும் இவ்வளச்சிக்கு அடிகோலியது. இதே போன்று ஜேர்மனிய சிந்தனையாளரான கோட்லொப் பிரேகே (Gotlob Frege) என்பவரின் Concept -script, The basic Laws of Arithmetic, Function and Concept மற்றும் On Sense and Reference எனும் நான்கு நூல்களின் வருகை மொழி பற்றிய ஆய்விலும் பயன்பாட்டிலும் புதிய அறிமுகத்தைத் தந்தன. பிரேகேயினது சிந்தனை சிறப்பாயிருந்தும் அது பெரும் செல்வாக்குப் பெறவில்லை. இவருக்கு சமகாலத்தவராக விட்கின்ஸ்ரெய்ன் காணப்படுகிறார். ஆனால் இப்போக்கில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியவராக விற்கன்ஸ்ரெய்ன் கருதப்படுகின்றார். விற்கன்ஸ்ரெய்னின் சிந்தனை பற்றிய ஆழமான அறிவுள்ளவர் பேராசிரியர் அனஸ் அவர்கள். அவர்களின் அறிவு அனுபவம் ஊடாக இத்தகைய திருப்பு முனையை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றேன்.

வெ.அழகரெத்தினம்

துறைத்தலைவர்

**மெய்யியலின் போக்கை மாற்றி அமைத்த மொழி மெய்யியல்: பிந்திய விட்கன்ஸ்டைனின் மெய்யியல் அணுகுமுறைகளை மையப்படுத்திய ஆய்வு.**

A Breakthrough in Philosophy is the Philosophy of Language:
A Focused study of Philosophical Methods in the Later Wittgenstein

உபவேந்தர் அவர்களே

பேராசிரியர்களே

விரிவுரையாளர்களே

மாணவர்களே

இன்று உங்கள் முன்னிலையில் உரையாடக் கிடைத்த சந்தர்ப்பம் எனக்கு அளிக்கப்பட்ட கௌரவம் என்று எண்ணுகின்றேன்.

சர்வதேச மெய்யயில் தினம் இன்று நினைவு கூறப்படுகின்றது. பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அவர்களின் நினைவு தினமும் இன்றைய தினத்தின் மற்றொரு சிறப்பு நிகழ்வாக நடைபெறுகின்றது. மனித நாகரீகம் வளர்ச்சி அடையத் தொடங்கியதில் இருந்து மனித வாழ்வில் மெய்யியல் பெரிய தாக்கத்தை நிகழ்த்தி வந்துள்ளது. சமூகம், அரசியல், ஒழுக்கம், கல்வி, சட்டம், ஆன்மீகம், பகுத்தறிவு, அறிவியல், மானுடமையவாதம், இலக்கியம் என மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மெய்யியல் சிந்தனைகளின் பங்காற்றுகை மிகப் பெரியது. மெய்யியல் சிந்தனையாளர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவின் நினைவு வேந்தல் தினமும் ஒன்றிணைந்திருப்பதில் பெரிய சிந்தனைப் பொருத்தம் உள்ளது. மெய்யியல் சிந்தனைக்கென தமது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட மெய்யியல் அறிஞர் சோ. கிருஷ்ணராஜா மாணவரிடையேயும் பொதுமக்களிடையேயும் மெய்யியல் சிந்தனைகளை வளர்ப்பதில் பெரும் ஆர்வம் உள்ள ஆசானாக திகழ்ந்தார்.

இலங்கையில் அளவையியல் கல்வியின் விருத்திக்காக உழைத்தவர்களில் அவரது பங்களிப்பு எப்போதும் நினைவுகூரப்படும். இந்தக் கலைகள் எல்லாவற்றையும் நாம் கற்றுத்தேறவும் உண்மையான மெய்யியலைச் சிந்திக்கவும் வழிகாட்டியாக இருந்த செ.வே காசிநாதன் அவர்களை இங்கு பதிவு செய்வது எனது கடமை. எங்கள் இருவரினதும் ஆசான் காசிநாதன். தமிழில் மொழி மெய்யியல் கலையின் சிற்பி செ.வே. காசிநாதன் என்றால் அது மிகையல்ல. மொழி மெய்யியல் அவரது சிந்தனையில் என்றும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

### மொழியியல் பிரச்சினை

மொழியிலும், மொழி தொடர்பான பிரச்சினைகளிலும் மெய்யியலாளர்கள் காட்டிவரும் ஆழ்ந்த அக்கறை அண்மைக்கால மெய்யியலில் ஏற்பட்ட பெரிய மாற்றமாகும். இதற்கு ஒரு வரலாறுண்டு. சிந்தனைகளைத் தெளிவுபடுத்துகையில் மொழி வெளிப்பாடுகளின் பொருள் என்ன என்பதையும் நாம் பயன்படுத்தும் பதங்களின் சரியான அர்த்தம் என்ன என்பதை விசாரணை செய்வதில் சோக்கிரட்டீஸ் அதிக கவனம் செலுத்தினார். பிளேட்டோவின் எழுத்துக்களிலும் மொழி ஒரு முக்கிய இடத்தை பெற்றிருக்கின்றது.

சில வினாக்களை எழுப்பும் பொழுது அல்லது வாதங்களில் சில சொற்களைப் பயன்படுத்தும் பொழுது, அவற்றின் பொருள் என்ன என்று அறிவதை சோக்கிரட்டீஸ் ஒரு முறையியலாகவே பயன்படுத்தியதை நாம் அறிவோம்.

சோக்கிரட்டீய விசாரணையில்;

பதங்களையும் கருத்துக்களையும் மேலோட்டமாகச் சொல்லி, சோக்ரட்டீஸின் விசாரணங்களிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது.

யூதிப்ரோவுடன் சோக்ரட்டீஸின் நடத்திய உரையாடலில் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை நாம் பார்க்கலாம் :

சோக்ரட்டீஸ் : “எது சமயக் கடமை”, “எது பாவம்” என்பதை எனக்குக் கூறு. எல்லாச் சூழ் நிலைகளிலும் ஒரு செயலின் சமயத்தன்மையும் அல்லது புனிதத்தன்மையும் ஒன்றா? ஒவ்வொரு பாவச் செயலையும் பாவச் செயலாக்குவது எது? எது புனிதத்தன்மையானது? எது பாவத்தன்மையானது? (பார்க்க: எம்.எஸ்.எம்.அனஸ், 2022)

ஒழுக்கக் கருத்துக்களின் கூற்றுக்கள் பதங்களுக்காக சோக்கிரடீஸ் தரும் சொற்பொருள் வரையறையும் (Definition) விட்கன்ஸ்டைனின் சொற்கள் தொடர்பிலான சொற்பொருள் வரையறையும் ஒன்றல்ல. எமது மொழிப் பயன்பாடு பற்றி ஒரு நியாயப்படுத்தலின் தேவையை சோக்ரடீய வரைவிலக்கணம் கூறுவதாகக் கருதலாம்.

பொதுப் பெயர் ஒன்றுக்கு நாம் வழங்கும், சொற்பொருள் வரையறை என்பது மொழியில் பதத்தின் பயன்பாட்டை விபரிப்பதாக அமையாது. காரணம் கூறுதல் தான் அங்கு நிகழ்கிறது. பொதுப் பெயரின் பொதுப் பண்பினை அடையாளம் காண்பது என்று இதைக் கூறலாம். மேலும் சொற்பொருள் வரையறையைக் கூறுவது அல்லது அதற்குக் கிட்டிய விதத்தில் அதை அணுகுதல் எனலாம்.

சோக்ரட்டீய முறையுடன் இதை இணைத்துப் பார்த்தால் சோக்ரட்டீய விசாரணை முறையில் இரு கட்டங்கள் உள்ளன :

(1) சோக்கிரடீசுடன் கலந்துரையாடலில் பங்கேற்ற இரு தரப்பினரும் எடுத்துக் கொண்ட பெயர் தொடர்பில் இணக்கத்துக்கு வருவதற்கான எடுத்துக் காட்டுக்களைச்

சேகரித்தல் எடுத்துக் கொண்ட சொல் பக்தியாக இருந்தால் "பக்தி" நடத்தைக்கான எடுத்துக்காட்டுக்களை முன்வைத்தல்.

(2) ஒரு பொதுப் பண்பைப் பெறுவதற்காகச் சேகரிக்கப்பட்ட எடுத்துக்காட்டுக்களை விசாரணை செய்தல் அந்தப் பெயரைப் பெற அது தகுதியானதெனக் கருத இடமுண்டா என்று பார்த்தல். அதிலிருந்து பக்திக்கான வரைவிலக்கணத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

மொழிப் பயன்பாடு என்பதை சோக்ரடீஸ் கவனத்தில் கொண்டிருக்கவில்லை. நீதி, உண்மை, கடமை பற்றிய ஒழுக்கவியல் கருத்துக்களின் உண்மையான இயல்பை அறிவதே சோக்ரடீசின் நோக்கமாக இருந்தது. சோக்ரடீஸ் நீதியை, பக்தியை வரையறை செய்ய விரும்பினார். அவற்றின் இயல்பை விளக்க விரும்பினார். பதத்தை வரையறுத்து அதற்கு அவர் அர்த்தம் தரவில்லை.

சொற்களின் பொருளைத் தெளிவுபடுத்துவதில் அல்லது பரிசீலிப்பதில் பெரிய ஆர்வம் சோக்கிரட்டீஸுக்கு இருந்தது. எனினும் மொழியியல் பிரச்சினைக்கான ஒரு தொடக்கத்தை அல்லது ஒரு முறையை மட்டுமே அது காட்டுகின்றது. தற்கால மொழி மெய்யியல் பல சாதனைகளைச் செய்துள்ளது. சோக்கிரட்டீஸ் பாணியில் தான் அது பிரவேசித்தது என்று வாதிடுவதும் இலகுவல்ல.

**பகுப்பாய்வு - தொடக்கநிலை**

தனது காலத்தில் ஆதிக்கம் செலுத்திய பௌதீகவதீத மெய்யியலுக்கு மாற்றமான கருத்தை 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜீ.ஈ.மூஅர் (1873-1958) முன்வைத்தார். அவரது வாழ்க்கை வரலாற்றில் முக்கிய கருத்தை இங்கு நோக்குவோம்.

''இந்த உலகமோ அறிவியலோ எந்தவித மெய்யியல் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியதாக நான் கருதவில்லை. மெய்யிலாளர்கள் உலகு பற்றி, இயற்கை அறிவியல் பற்றிக் கூறி இருப்பவை தான் பிரச்சினைகளாக உள்ளன என்று நான் கருதுகின்றேன்.''

ஜீ.ஈ. மூஅரின் பகுப்பாய்வுக் கோட்பாட்டை பின்னர் நாம் பார்க்கலாம். ஆனால் ஒரு கருத்தை இங்கு கூறிவைப்பது முக்கியமானது. உண்மையாகக் கூறுவதானால் 20ம் நூற்றாண்டை அடையாளப்படுத்தும் வகையில் ஒழுக்கவியலில் நடந்த புரட்சி 1903ல் ஜு.ஈ. மூஅரின் **பிரின்சிப்பியா எத்திக்கா** என்ற நூலினால் தான் நிகழ்ந்தது. ஒழுக்கவியல் பற்றிய முந்தைய மெய்யியலாளர்களின் ஒழுக்கவியல் எழுத்துக்களை கவனமாகப் பகுப்பாய்வு செய்தால் அந்த எழுத்துக்கள் மிகவும் குழப்பமான நிலையில் இருந்தன என்பதனை அறியலாம். முக்கியமாக இந்த மெய்யியலாளர்கள் தாங்கள் பதிலளிக்கப் போகும் வினாக்களை வேறுபடுத்திப் பார்க்கத் தவறியதால் இக்குழப்பம் நிகழ்ந்துள்ளது (Luthur J. Binskley, 1961).

அதுபோல் அவரது பகுப்பாய்வு முறை ‘‘நன்மை’’ என்பதனை விபரிக்கமுடியாதது என்றும் ஒழுக்கவியல் சொற்களின் உண்மையான பயன்பாட்டை அறியவேண்டும் என்றும் அவர் முன்வைத்த கோரிக்கைகள் தற்கால ஒழுக்கவியல் ஆய்வுகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. புவியியல் ரீதியில் பகுப்பாய்வு மெய்யியல் 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இங்கிலாந்திலும் ஆங்கிலம் பேசும் நாடுகளிலும் ஜேர்மன் மொழி பேசும் நாடுகளிலும் ஆரம்பித்திருக்கின்றது.

தோற்றப்பாட்டியல் பள்ளியைச் சேர்ந்த மாக் (Mach), அவிநாவியூஸ் ஆகிய இருவரும் தோற்றப்பாட்டை மட்டும் கையாளும் பௌதீகவியல் (இயற்பியல்) அறிவியல்களைப் பின்பற்றுவதில் அறிவுபூர்வமான அனுபவத் தரவுகளுடன் மெய்யியலை வரையறுத்தனர். நமது உணர்வுகளின் புறநிலைத் தன்மையை எவ்வாறு சரிபார்க்க முடியும் என்பதை அறிய மாக் பல விடயங்களைத் தேடினார். மெய்யியலில் கணித மொழியைப் பயன்படுத்தினார். பகுப்பாய்வு மெய்யியலாளர்கள் என்று அழைக்கப்பட்ட வியன்னா வட்டத்தினர் மாக் உடனும் அவரது பள்ளியுடனும் நேரடித் தொடர்புள்ளவர்கள். (Teodoro de law Torre, 1988).

இங்கிலாந்தில் பிந்திய - புற இயல் மெய்மைவாதிகள் (Neo Realist : பிந்திய யதார்த்தவாதிகள்) இயக்கத்தினர் முன்னிலையில் இருந்தனர். கருத்துவாதத்தை எதிர்ப்பதில் அவர்கள் தீவிர நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். மதச்சார்பற்ற மரபையும் அனுபவவாதச் சிந்தனைகளையும் அவர்கள் ஆதரித்தனர். எண்ணக்கரு பகுப்பாய்வைத் தமது அணுகுமுறையாகவும் பயன்படுத்தினர். கணிதக் கோட்பாட்டுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த இவர்கள் மொழியியல் அல்லது எண்ணக்கருப் பகுப்பாய்வைப் பயன்படுத்திவந்தனர்.

பிந்திய - புறவியல் மெய்மைவாதிகளும் தோற்றப்பாட்டியல்வாதிகளும் ஒரு பொதுக் கருத்தை தமதாக்கிக் கொண்டனர். முறையான தளத்தில் இருந்து அறிவுப் பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற வேண்டுமானால் சொற்கள், எண்ணக்கருக்கள் பற்றிய சரிநுட்பமான பகுப்பாய்வும் விமர்சனமும் வேண்டும் என்ற பொதுக்கருத்திற்கு வந்தனர். மெய்யியல் வெளியீட்டிற்கு மூஅர் ‘‘சாதாரண மொழியை’’ வலியுறுத்தினார். மெய்யியலின் மொழியில் காணப்படும் குழப்ப நிலையை இல்லாமற் செய்யவதற்கு தர்க்க - கணித மொழியைப் பகுப்பாய்வாளர் முன்வைத்தனர்.

ஒரு கலாசார தோற்றப்பாடு என்ற வகையில் நோக்கினால் பகுப்பாய்வு மெய்யியல், மெய்யியலில் நிகழ்ந்த நவீனவாத (Modernism) செல்வாக்கு என்று கூறலாம். பழைய மரபுகளை நவீனவாதம் நிராகரித்தது. மெய்யியலில், மொழியிலும் முறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பழையதை நிராகரித்ததுடன் புதிய வடிவங்களையும் நவீனவாதம் அறிமுகம் செய்தது. தொழிநுட்பவியல் மீதான ஆர்வமும் தொழிநுட்ப முறைகளும் எல்லாத்துறைகளிலும் முக்கியத்துவம் பெற்றுவந்தன. பகுப்பாய்வு மெய்யியல் அளவையியலில் புதிய நுட்பங்களையும் கணித அடிப்படைகளையும் உள்வாங்கத் தொடங்கியது.

பகுப்பாய்வு மெய்யியலாளர்கள் கடந்தகால மேற்கத்தேய மெய்யியல் மரபுகளிற்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தனர். மேலும் புதிய மெய்யியல் செயற்திட்டங்களுக்கு உயிரூட்டினர். மெய்யியலை மட்டுமன்றி சமூகத்தையும் பழைய வடிவங்கள், பழைய பிடிவாத ஆக்கிரமிப்புக்கள் என்பவற்றிலிருந்து விடுவித்தனர்.

பகுப்பாய்வு மெய்யியல் பல மூலாதாரங்களின் செல்வாக்கைப் பெற்று வளர்ந்தது என்பது வரலாறு. பிரித்தானிய அனுபவவாதம் (British Empiricism) இயற்கை அறிவியலின் முன்னேற்றம், என்பவற்றோடு அளவையியலிலும் குறியீட்டு அளவையியலிலும் நிகழந்த முன்னேற்றங்கள் முக்கியமானவை.

பகுப்பாய்வு மெய்யியலின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் நிகழ்ந்த வகையைப் பின்வருமாறு கூறலாம்: 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், பல பகுப்பாய்வு மெய்யியலாளாகள் அனுபவவாதம் அறிவியல் மற்றும் கணிதம் ஆகியவற்றிற்கு முன்னைய மெய்யியலாளர்களை விட அதிகத் தொலைதூர மற்றும் விமர்சன அணுகுமுறைகளைப் பின்பற்ற முடிந்தது. இது ஒழுக்கவியலில் பகுப்பாய்வு முறைக்கு இடமளித்தது. பௌதிகவதீத்தில் (மீ மெய்யியலில்) ஆர்வத்தைப் புதுப்பித்ததுடன். பண்டைய கிரேக்க மெய்யியல் முதல் கடந்தகால மெய்யியலாளர்கள் வரை கவனத்தையும் நயத்தலையும் அதிகரிக்கச் செய்தது. ஒழுக்கவியலாளர்கள், பௌதீகவதீதவாதிகள், மெய்யியல் வரலாற்றாசிரியர்கள் தமது துறைகளுக்குப் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தினா்' (Stephen P. Schwarts,2012).

**ஒக்ஸ்போர்ட் பின்னணி**

இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் மரபு ரிதீயான உண்ணோக்குகை (Introspective) வழியாக எண்ணக்கருக்களை ஆராயும் முறை மாற்றப்பட்டு, சாதாரண மொழி (அல்லது நாளாந்த மொழி) ஊடாக எண்ணக்கருக்களை ஆராயும் முறை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகிறது. அக்காலத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பெற்றிருந்த மெய்யியல் நடவடிக்கைகளிலும் ஆய்வுகளிலும் இது ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

'ஒக்ஸ்போர்ட் மெய்யியல்' என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட இந்த மெய்யியல் இயக்கத்திற்கு 'மொழியியல் பகுப்பாய்வு', 'எண்ணக்கருப் பகுப்பாய்வு' என்ற பெயர்களும் இருந்தன. இன்று இதன் செல்வாக்கு பழைய நிலையில் இல்லையாயினும் அந்த வரலாறு முக்கியமானது. "On Referring" (1950) என்ற ஸ்ட்ரௌசனின் திட்டவட்டமான விபரிப்புக்கள் ரசலின் அளவையியல்வாத - மொழியியல் கோட்பாட்டை நிராகரித்தது. மொழி வெளிப்பாட்டின் பயன், அதன் பின்புலம் (அல்லது context) வழியாக அன்றி அர்த்தம் தேடுவது சரியானதன்று என்ற கருத்தை ஸ்ட்ரௌசன் முன்வைத்தார். "மொழியின் பயன்பாடு'' என்ற பின்னணியினை அளவையியல் பகுப்பாய்வு கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டதாக அவர் விமர்ச்சித்தார்.

ஆங்கில மொழி மெய்யியலில் ஆஸ்டின் போல் முக்கிய இடத்தில் இருந்த மற்றும் ஒருவர் கில்பர்ட்றைல் (1900 - 76) மொழியியல் பகுப்பாய்வாக, மொழி மெய்யியல் அதிகம் பேசப்பட்டது. வெளிப்படையான வெவ்வேறு பதங்களின் தவறான பிரயோகம் காரணமாக மெய்யியலில் மனக் குழப்பங்கள் ஏற்படலாம். மொழி பயன்படும் விதம், மற்றும் அளவையியல் பகுப்பாய்வு என்பவற்றின் மூலமாகவே இந்த மனக்குழப்பத்தை நீக்கலாம் என்று றைல் கூறினார்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் விட்கன்ஸ்டைன் இயக்கம் ஒக்ஸ்போாட்டிற்கு மாற்றம் பெற்றது. நோமன் மெல்கம், அலிஸ் எம்ப்ரோஸ், பிரட்ரிக் வைஸ்மன் போன்றவர்கள் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் விட்கன்ஸ்டைனின் சமகாலத்திலேயே 'சாதாரண மொழி' பற்றிய உரையாடல்களை ஆரம்பித்து விட்டனர்.

பின்னர் 1940 களில் கில்பேர்ட் றைல், ஜெ. எல். ஆஸ்டின் ஆகியோர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இதே ஆய்வுகளில் ஈடுபட்டனர். எச். எல் ஏ.ஹார்ட், ஜி. வோர்னொக், பி. எல். ஸ்ட்கில்னர் ஜே. ஒம்சன் போன்றவர்களும் இதே பணியில் ஈடுபட்டனர். இது அக்காலத்தில் ஒக்ஸ்போாட் மொழி மெய்யியல் பிரிவு என்று அழைக்கப்பட்டது. ஆனால் 1953 இல் வெளிவந்த விட்கன்ஸ்டைனின் "மெய்யியல் ஆய்வு" நூல் மெய்யியல் மொழியின் பங்கினை ஒரு திருப்புமுனைக்கு கொண்டு செல்கிறது. ரசல் மற்றும் மூஅரில் இருந்து விட்கன்ஸ்டைன் விலகிச் சென்றார். மொழி பற்றிய சாதாரணமான ஒரு ஆய்வென்று இந்நூல் குறித்த ஒரு விமர்சனத்தில் ரசல் கூறினார். ஆனால் பாரிய மாற்றத்திற்கான உள்ளடக்கத்தை அது கொண்டிருந்தது.

மெய்யியல் ஆய்வு நூல் வெளிவந்ததில் இருந்து முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன. சாதாரண மொழியைஇ அதன் இயற்கையான, சாதாரண செயற்பாட்டில் இருந்து பிரித்து வேறாக்கும் போது மெய்யியல் பிரச்சினைகள் தோன்றுவதாக இரண்டாவது நூல் கூறியது. சொற்களை அவற்றின் மெய்யியலில் இருந்து சாதாரண (நாளாந்த பயன்பாட்டு) அர்த்தத்திற்கு கொண்டு வரும் முறையை விட்கன்ஸ்டைனின் இரண்டாவது நூல் அறிமுகப்படுத்தியது.

மெய்யியல் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில் 1905இல் இருந்து ரசல் குறியீட்டு அளவையியலை பயன்படுத்தி வந்தார். அவரது தர்க்க அணுவாதக் கோட்பாட்டிற்கு அமைய இடத்தை பெற்றிருந்தது. பொருள்களிலிருந்து வேறுபாடான நேர்வுகள் பற்றி அவர் பேசினார். உலகிலுள்ள பொருட்களுக்கு வெவ்வேறான உடைமைகள் உள்ளன. அவை வெவ்வேறு உறவுகளை கொண்டிருக்கின்றன. அந்த உடைமைகளும், உறவுகளும் தான் நேர்வுகள் என்று ரசல் நேர்வுகள் பற்றி விளக்கினார்.

பல தனிப்பட்ட நேர்வுகள் பகுதிகளாக சேர்ந்திருக்கும் போது அவை பகுப்பாய்வுக்கான வாய்ப்பை உருவாக்குகின்றன. சிக்கலான (ஒன்றுக்கு மேற்பட்ட) நேர்வுகள் சிக்கலான மொழிக்கு சமமானது. அதனால் ஒவ்வொரு கூற்றும்(அல்லது எடுப்புக்களும்) புற உலகு பற்றியும் நேர்வுகள் பற்றியும் போதுமான பட அமைப்பை நமக்குத் தருகின்றன. மொழி அல்லது பதங்கள் நேர்வுகளை சரிநுட்பமாக பிரதிபலிகும் போது அர்த்தமுள்ள மொழியை

நாம் பெற்றுக்கொள்கிறோம். பதங்கள் எடுப்புக்களாக உருவாக்கப்படும் போது அந்த எடுப்புக்கள் அளவையியல் ரீதியில் நிறைவான மொழியாகின்றன. எடுப்பிலுள்ள ஒவ்வொரு சொற்களும் நேர்வுகளுடன் இசைவானவை அல்லது நேர்வுகளை சுட்டிநிற்பவை.

**ரெக்டேடஸ் - விலகிச் செல்லுதல்**

'வாழ்க்கை வடிவத்தில் (வாழ்க்கைக் கோலத்தில்) மொழியின் இயக்கநிலை என்ன என்று பார்ப்பதாகவும் இது அமையலாம்.

மொழியைப் புரிந்து கொள்வதற்கு அதன் சூழமைவின் (Context) பொருத்தம் இன்றியமையாதது என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார். மொழியில் பல குழப்ப நிலைமைகள் உள்ளன. இது பொதுவாக உணரப்படுவதில்லை.

சாதாரணமாக மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில் கவனம் செலுத்தப்படவில்லை. பாரம்பரிய மெய்யியலாளர்கள் வழங்கிவந்த திரிபுபடுத்தப்பட்ட கூற்றுக்களிலிருந்துதான் மெய்யியல் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. மெய்யியல் பின்னணியற்ற சூழலில் அவை என்ன அர்த்தத்தைக் கொண்டிருக்கும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. சாதாரண மொழி மெய்யியல் இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வையே ஆராய்கிறது.

ரெக்டேடஸ் நூலை முழுமைப்படுத்திய போது தமது கோட்பாடுகள் சரியானது என்று விட்கன்ஸ்டைன் நம்பினார். அது வரை மெய்யியலில் இருந்த பெரிய பிரச்சினைகள் இறுதியாகத் தீர்க்கப்பட்டு விட்டன அல்லது கொள்கை அளவிலாவது தீர்க்கப்பட்டு விட்டன என்று ஒரு பெருமித உணர்வு பாரிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுத் தீர்வுக்கான எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு விட்டன என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது. ஆனால் ஒரு மெய்யியலாளர் முன்னெடுக்க வேண்டிய பணிகள் இன்னும் இருந்தன. (பார்க்க : G. Pitcher, 1985).

ரெக்டேடசில் தான் முன்வைத்த அணுக் கோட்பாடுகள், மொழி, மற்றும் அர்த்தம் மீதான பகுப்பாய்வுகள் திருப்தியற்றிருந்ததையும் அதிலிருந்து தான் மீண்டு வந்ததையும் 'மெய்யியல் ஆய்வு' நூலின் முன்னுரையில் விட்கன்ஸ்டைன் பின்வருமாறு கூறுகிறார்:

'நான்கு வருடங்களுக்கு முன்பு ஒருவருக்கு விளக்கம் தருவதற்காக எனது, 'Tractatus Logico-Philosophicus' நூலை மீளப் படித்தேன். எனது பழைய சிந்தனைகளையும் புதிய சிந்தனைகளையும் ஒன்றாக ஒரு நூலில் பிரசுரிக்க வேண்டும் என்று எனக்கு சடுதியாக ஒரு எண்ணம் தோன்றியது. பிந்திய சிந்தனைகளை முன்னையதன் ஒளியில் பார்க்கும்

போதுதான் எனது பழைய சிந்தனை எவ்வளவு மாறுபட்டிருந்தது என்பதைப் பார்க்க வாய்ப்பாகும்.’

பதினாறு வருடங்களின் பின்னர் மீண்டும் நான் மெய்யியலில் ஆரம்பத்திலிருந்து முதல் நூலில் (ரெக்டேடஸ்) நான் விட்ட கடுமையான தவறுகளை அடையாளம் காணவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தத் தவறுகளை என்னால் மதிப்பிட முடியாத அளவிற்கு, பிறேங்க் ராம்சேயுடன் நடந்த விவாதங்களில் ராம்சேயின் கருத்துக்களுடன் எனது கருத்துக்கள் எதிர் கொண்ட விமர்சனத்தின் ஊடாக உணர முடிந்தது. அவரது இறுதி இரண்டு வருட வாழ்க்கையில் எண்ணற்ற உரையாடல்களில் நான் இது குறித்து அவருடன் விவாதித்துள்ளேன்.’ (Ludwig Wittgenstein, 1986).

**பிந்திய - விட்கன்ஸ்டைன்**

1920 அளவில் விட்கன்ஸ்டைன் அவரது பகுப்பாய்வு மெய்யியல் கோட்பாட்டை உருவாக்கி விட்டார். பேர்ட்ரன்ட் ரசலின் தர்க்க அணுவாதத்தின் புதிய கருத்து விளக்கமாகவும் பகுப்பாய்வு மெய்யியலுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட நூலாகவும் விட்கன்ஸ்டைனின் ‘Tractatus Logico Philosophicus’ நூல் 1922 ல் வெளிவருகிறது.

தர்க்கஅணுவாதம் (Logical Atomism) ரெக்டேடஸில் படக் கோட்பாடாகியது. (PictureTheory) பேட்டன்ட் ரசல் ‘பிரின்சிப்பியா மெத்தமெட்டிகாவில்’ முன்வைத்த நிறைவான மொழி (Ideal Language) உலகப் படமாக உலகைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மாற்றமடைந்தது. உலக நிலப்பரப்பை ஒரு வரைபடம் காட்டுவதுடன் ஒத்த தன்மையாக இது எடுத்துக் கொள்ளப்பட்டது. நிறைவான மொழி யதார்த்தத்தின் கட்டமைப்பை சரியாகக் காட்டுகிறது. இவ்வாறு அவரது வாதம் நிறைவான மொழி நேர்வுகளின் கட்டமைப்பைத் தருகின்றன. (Richard H. popkin, Arum stroll, 1993).

நேர்வுகள் பொருட்களாலும் அவற்றின் உடைமைகளாலும் கூட்டிணைக்கப்பட்டவை. மொழி அதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது (செய்ய வேண்டும்). இவ்வகையில் உலகின் கட்டமைப்பை (பகுப்பாய்வு) மெய்யியல் விபரிக்கிறது.

பகுப்பாய்வு மெய்யியலில் ஈடுபாடு கொண்டிருந்த மெய்யியல் குழுவினர் விட்கன்ஸ்டைனின் இக்கருத்துக்களால் மிகவும் கவரப்பட்டனர். தமது கொள்கைகளுக்கான தீர்க்கமான விதிகள் கண்டு பிடிக்கப்பட்டடு விட்டதாக மகிழ்ந்தனர். ரெக்டேடஸ் ஒரு வேத நூல் போல் கொண்டாடப்பட்டது.

ஆனால், அடுத்த பத்து வருடங்களுக்குள் விட்கன்ஸ்டைன் தனது ரெடேட்டஸ் கோட்பாடுகளில் அதிருப்தியடைந்தார். புதிய மொழி மெய்யியல் நோக்கி அவர் பிரவேசிக்கத் தொடங்கினார். அதாவது மொழி பற்றிய தனது முன்னைய நிலைப்பாடுகளிலிருந்து அவர் விலகிச் சென்றார். 1940களில் தனது புதிய மொழி மெய்யியல் நிலைப்பாட்டை எடுத்துக் கூறும் கருத்துக்களையும் முறைகளையும் ஒழுங்கமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். விட்கன்ஸ்டைனின் முறை மெய்யியலுக்கான

புதிய அணுகுமுறைகளை முன்வைத்தது மொழிமெய்யியலை ஒரு திருப்புமுனைக்கு இட்டுச் சென்ற அவரது இரண்டாவது சிந்தனை ‘Philosophical Investigation’ நூலாக 1953ல் வெளி வருகிறது.

மொழியின் அர்த்தம், நேர்வுகளுடன் அதன் தொடர்பு, நிறைவான மொழி அதை விளக்கும் படக் கொள்கை பற்றிய பழைய நிலைப்பாட்டிற்கு மாற்றமான கொள்கைகளை ‘மெய்யியல் ஆய்வு’ நூல் பேசியது. 1946 இல் பிரசுரத்துக்கான பிரதி வடிவத்தை அந்த நூல் பெற்றுவிட்டது போதும். 1951ல் அவரது மரணத்தின் பின்னர்தான் அது வெளியிடப்பட்டது.

**மொழியின் படக்கோட்பாடு.**

விட்கன்ஸ்டைனின் ஆரம்பகால தத்துவ வாழ்க்கையும் அவர் எடுத்துக் கொண்ட ஆய்வுப்பகுதியும் பிரீகே மற்றும் ரசல் ஆகியோர் கையாண்ட பிரச்சினைகளை ஒட்டியதாகவே இருந்தன. எடுப்புக்களின் தொழிற்பாடு, மாறிகள் (Variable), பொதுமை, அடையாளம்இ குறியீடு என்பன அவரது சிந்தனைகளை ஆக்கிரமித்திருந்தன. விரைவில் விட்கன்ஸ்டைன் முக்கியமான கண்டுபிடிப்பை உருவாக்கினார். இது உண்மை தொழிற்பாடுகள் (Truth Function) பற்றிய ஒரு குறியீட்டு வாதமாகும். ரெக்டேட்டசின் பழைய பகுதிகள் அளவையியல் சார்ந்தவை. 1914ல் போர் வெடிப்பதற்கு முன்பும் அவரது 26 வயதிலும் இந்த சிந்தனைகளே பிரதான இடத்தைப் பெற்றிருந்தன.

ரெக்டேட்டசிற்கு முன்னதாக எழுதப்பட்ட குறிப்பேடுகளில் நான் எழுதும் அனைத்தைவிடப் பெரிய பிரச்சினை எதுவென்றால்: முன்னது ஏதுவானதென்ற (*a priori)* ஒரு ஒழுங்கு உள்ளதா? அவ்வாறிருந்தால் அது எதைக் கொண்டுள்ளது என்பதற்கு ரசலின் தர்க்க அணுவாதத்திலும் தர்க்க அணுவாத கருத்தை ஏற்றிருந்த விட்கஸ்ஸ்டைனிடமும் ரெக்டேட்டசிலும் இதற்குப் பதில் இருந்தது. ‘ஆம்’ அத்தகைய ஒழுங்கு உள்ளது. அது அளவையியல் ரீதியான கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

**தர்க்க அணுவாதம்**

‘நான் வாதிட விரும்பும் கோட்பாட்டை தர்க்க அணுவாதம் என்று அழைக்கிறேன். இது கணிதத்தின் மெய்யியல் பற்றிய எனது சிந்தனைப் போக்கினால் என்னில் கட்டாயப்படுத்தப்பட்ட கருத்து. கணிதக் கோட்பாடுகள் நூலில் நான் நிருபிக்க முயற்சித்தது போல நாம் கணிதத்தைப் பகுப்பாய்வு செய்யும் போது அனைத்தையும் தர்க்கத்திற்குக் கொண்டு வருகிறோம். நான் கூறும் அளவையியல் அணுத்தன்மையானது. ஹெகலைப் பின்பற்றுவோர் முன்வைக்கும் ஒருமைவாத அளவையியலுக்கு மாறானது’

1918ல் ‘The Philosophy of Logical Atomism’ என்ற தலைப்பில் ரசல் ஆற்றிய உரையின் ஆரம்ப வரிகள் இவை. இவ்வுரையை முழுமையாகப் படிக்கும் போதும் ஏனைய அவரது கருத்துக்களை ஆராயும் போதும் நாம் அறிந்து கொள்வது : தர்க்க அணுக்கள் என்பது யதார்த்தின் (புற மெய்மையின்) அடிப்படையான அங்கமாகும்.

மொழியை ஆராய்வதினூடாக புறமெய்மையின் இயல்பைப் பகுப்பாய்வு செய்யலாம் என்று அவர் கருதினார். ரசல் கூறுவதன் படி எமது அனுபவத்துக்குள்ளாகும் ஒவ்வொன்றையும் அளவையியல் அணுக்களாக (பௌதிக அணுக்கள் அல்ல) பகுப்பாய்வு செய்யலாம். இது இயற்பியல் போல் தோன்றினாலும் மெய்யியல் அளவையியல் அணு என்பதன் மூலம் ரசல் சொல்வதென்ன? அவை தனியன்கள், பண்புகள், மற்றும் உறவுகள் என்று அவர் கூறுகிறார். ரசல் கூற வருவதை இவ்வாறு கருதலாம்: அளவையியல் கண்ணோக்கில் இருந்து யதார்த்தத்தை நாம் பார்த்தால் ஒன்றோடொன்று உறவு கொண்ட சில பண்புகளைக் கொண்ட தனியன்களாக இனக் குறைப்புச் செய்யலாம். உலகம் அடிப்படையான அளவையியல் நேர்வுகளை (அல்லது அணுக்களை) கொண்டுள்ளது. இந்த அணுக்களை அதற்கும் அப்பால் குறைப்பு செய்ய முடியாது. அணு எடுப்பு என்பதன் இறுதி அர்த்தம் இதுதான்

தர்க்க அணுவாதத்தின் ஒரு அடிப்படை அனுமானம் என்னவென்றால் மொழிக்கும் உலகத்திற்கும், மொழிக்கும் சிந்தனைக்கும் இடையில் ஒரே வகையான வடிவக்கட்டமைப்பு (Isomorphism) உள்ளது. இந்த ஒரே வகை வடிவக்கட்டமைப்பினால் உலகை நாம் சிந்தித்து எமது சிந்தனைகளை மொழியாக வெளியிடுகின்றோம். மொழி, சிந்தனை மற்றும் உலகம் என்ற மூன்றும் ஒரே கட்டமைப்பைக் பெற்றுள்ளன. இந்தக் கட்டமைப்புக் குறியீட்டு அளவையியலினால் முன்வைக்கப்படுகின்றது. இது அனைத்தையும் தழுவியதான உலகத்தைப் பிரதிபலிக்கும் அளவையியல் என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார்.

மொழி, சிந்தனை, யதார்த்தம் என்பவற்றின் பொதுக்கட்டமைப்பை ரசலின் தர்க்க அணுவாத அளவையியல் சாதித்ததாக மரபுவாதிகள் கருதினர். உலகைத் தெளிவாகப் பிரதிபலிக்கும் இயல் தகைமை சாதாரண மொழிக்கு இல்லை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. சிந்தனையும் மொழியும் குறியீட்டு அளவையியலினால் முகாம்களாக்கப்பட்டன. குறியீட்டு அளவையியலினால் கட்டமைக்கப்பட்ட நிறைவான மொழி தான் (Ideal Language) உலகத்தின் கட்டமைபை சரிநுட்பமாகக் கூறவல்லது என்று முடிவு கொள்ளப்பட்டது. ரசலின் தர்க்க அணுவாதமும் விட்கன்ஸ்டைனின் ரெக்டேட்டசும் இதற்கான எல்லா அடிப்படைகளையும் வெளிப்படுத்தியிருந்தன. யதார்த்ததின் தர்க்க வடிவத்தை எடுப்புக்கள் காட்டுகின்றன என்று முந்திய விட்கன்ஸ்டைன் எளிமையாக இதை வரையறுத்திருந்தார்.

ஒரு நிகழ்வை எடுப்பு எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை விளக்கும் போது அதை ஒரு காட்டுரு அல்லது படத்துடன் விட்கன்ஸ்டைன் ஒப்பிட்டார். எடுப்பின் பாகங்கள் இணைவதிலிருந்து ஒரு எடுப்பின் கட்டமைப்பு எவ்வாறு உருவாகின்றது. யதார்த்தத்தின் கூறுகளின் இணைப்பை எடுப்பு எவ்வாறு பிரதிபலிக்கின்றது போன்ற கேள்விகள் எதிர்கொள்ளப்பட்டிருந்தன.

‘‘ஒரு எடுப்பு யதார்த்தத்தின் ஒரு படம். நான் ஒரு எடுப்பை அறிந்து கொண்டால் அது எதைப் பிரதிபலிக்கின்றது என்பதை நான் அறிவேன். அதன் பொருள் விளக்கப்படாமலேயே அந்த எடுப்பை நான் அறிந்து கொள்வேன்.’’ (4.02 ரெக்டேட்டஸ்).

இந்தப் பிரச்சினைக்கு இது மிகவும் நம்பகமான தீர்வாகும். ஒரு எடுப்பில் காணப்படுவதைத் தான் ஒரு படம் கொண்டிருக்கின்றது. அந்தப் படத்தைப் பார்த்து அது சித்திரிக்கும் சூழலை நம்மால் சொல்லிவிட முடியும். படத்திலிருந்து என்னால் படிக்க முடியும். ஒரு படம் எதைப் பிரதிபலிக்கின்றது என்பதை அது நமக்குக் கூறுகின்றது.

கொட்லொப் பிரேகே (1848-1925) பெர்ட்ரன்ட் ரசல் (1872-1970) போன்றோரின் முன்னைய முயற்சிகளால் திருப்தியடையாத விட்கன்ஸ்டைன் அளவையியல் உண்மையை ரெக்டேட்டஸில் (1922) மேலும் விபரிப்பதற்கு முயன்றார். உலகுக்கும் மொழிக்கும் இடையிலான தொடர்புஇ உலகுக்கும் அளவையியலுக்குமிடையிலான தொடர்பு என்பவற்றில் விட்கன்ஸ்டைன் கவனம் செலுத்தினார். யதார்த்தத்தை விபரிப்பதற்கு அளவையியல் இன்றியமையாதது என்பதோடு படக்கொள்கை தரும் அர்த்தத்தையும் மற்றொரு கருவியாக இணைத்துக் கொண்டார்.

உலகம் அணு எடுப்புக்களால் ஆனது. எல்லா எடுப்புக்களுக்கும் உண்மைத் தொழிற்பாட்டின் தொடர்புகள் உள்ளன. ஒவ்வொரு அணு எடுப்பும் எளிய பொருட்களைக் குறிக்கின்றது. அது பகுக்க (பகுப்பாய்வு செய்ய) முடியாத பெயர்களைக் கொண்டிருக்கும். ஒரு பெயரின் அர்த்தம் என்பது அது குறிக்கும் பெயராகும்.

ரெக்டேட்டசின் படக்கொள்கை பொதுவான எடுப்பு யதார்த்தத்தைச் சித்திரமாகவும் வரைந்தளிக்கும் என்று கூறுகிறது. சித்திரமாக்கித் தருவது தான் மொழியின் சாரம். ஒரு எடுப்பு பொருட்கள் எவ்வாறுள்ளன என்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இவ்வகையில் மொழி (எடுப்புக்ளினூடக) யதார்த்தத்தைப் படமாக்கித் தருகின்றது.

எல்லா அர்த்தமுள்ள எடுப்புக்களும் மூலக்கூற்று எடுப்புக்களின் தொழிற்பாடாகும் என்பதற்கான காட்டுருவாக முந்திய வின்கன்ஸ்டைனின் படக்கொள்கையும் அமைந்திருக்கின்றது. யதார்த்தத்தின் மாதிரியாக (படமாக) நேர்வுகளிற்கான படங்களை மனித அறிவுதான் உருவாக்குகின்றது. படம் ஒரு நேர்வு. அது யதார்த்தத்தின் பரிமாணம். அளவை வடிவம். யதார்த்தத்தின் அளவையியல் வடிவத்தை ஒரு எடுப்புமொழி கொண்டிருக்கின்றது.

**<u>சார எதிர்ப்பு</u>**

ஒவ்வொன்றுக்கும் சாரம் உள்ளதென்று, சாரத்தின் மீது மெய்யியலாளர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆயினும் அதில் தவறிருப்பதாக விட்கன்ஸ்டைன் கூறினார். அவற்றின் ஒரே தன்மை, அவற்றுக்கிடையிலான ஒருமைப்பாடுகள் பற்றி மரபுரீதியாக மெய்யியலாளர்கள் கொண்டிருந்த கருத்திற்கு இது மாற்றமானது. வேறுபாடுகளிலும் பன்மைத்தன்மையிலுமே விட்கன்ஸ்டைன் கவனம் செலுத்தினார். ஒற்றைத் தன்மை அல்ல, வேறுபாடுகளின் முக்கியத்துவம் அறியப்பட வேண்டும்.

‘மன்னன் லியரிலிருந்து நான் உங்களுக்கு வேறுபாடுகளைக் கற்பிப்பேன்’ (I’ll teach you differences – King Lear) என்ற வரியைத் தனது ‘மெய்யியல் ஆய்வு’ நூலிற்கு தூண்டுதல் வாசகமாகப் பயன்படுத்த விட்கன்ஸ்டைன் விரும்பி இருந்தார் (பார்க்க G. Pitcher, 1985).

உண்மை என்றால் என்ன? உண்மை என்ற சொல் வெளியிடும் எல்லாவற்றிக்குமான பொது அம்சங்கள் எவை? உண்மை, நீதி போன்ற பதங்களை சாதாரண மொழியில் அவை பயன்படும் விதத்தைப் பற்றிய விபரங்களில் இருந்து தான் அவற்றின் பொருளைத் தீர்மானிக்க வேண்டும். இது சாதாரண மொழி மெய்யியலாளர்களின் நிலைப்பாடு.

விட்கன்ஸ்டைனின் கருத்துப்படி குறிப்பிட்ட பொதுவான சொற்கள் (குதிரை, மனிதன், கடமை, விளையாட்டு) என்று கூறப்படுபவைக்கு பொதுவான பண்புகள் என எதுவுமில்லை. அதாவது அந்தச் சொற்கள் பொதுவானதொரு சாரத்தைப் பகிர்ந்து கொள்ளவில்லை.

சாரவாதத்தின் மீது விட்கன்ஸ்டைன் மற்றுமொரு தாக்குதலையும் நடத்துகிறார். பல சொற்கள் ஒரு ஒற்றைப் பொருளைத் தருவது மட்டுமல்லாமல் நிலையான பொருளையும் பெறத் தவறினால் அந்தச் சொல்லுடன் தொடர்புடைய கொத்தணி (Cluster) எப்போதுமே மாற்றத்துள்ளாகும் (G.Pitcher, 1985).

இக்கருத்தை விளையாட்டுக்கள் மூலம் விட்கன்ஸ்டைன் விளக்குகிறார். விளையாட்டுக்கள் என்று கூறப்படுபவை அனைத்தையும் நாம் எடுத்துக் கொண்டால் அவை அனைத்துக்குமான பொதுப் பண்புகளின் பகிர்வை நாம் காண முடியாது. இந்தக் கருத்தில் தான் ‘விளையாட்டுக்கள்’ எண்ணக்கருவையும் அதை விளக்கும் உவமானக் கருவியாக “குடும்ப ஒத்த தன்மைகளையும்” (Family Resembles) விட்கன்ஸ்டைன் முன்வைக்கின்றார்.

**மொழியும் பயிற்சியும் - காட்டுரு**

பயன்பாட்டின் ஊடாக மொழியை அறிவதற்கான முறைகளும் இலகுவானதல்ல. ஒரு சொல்லை விளங்கிக் கொள்வதில் பல நுட்பங்கள், பிரச்சினைகள் உள்ளன. அவற்றுள் சிலஇ மொழி சாராதவை. மொழியைப் பேசுவதில் சிக்கல்கள் உள்ளன. அதற்கான திறன்கள் தேவை. அது சரியாகவும் நிகழலாம், தவறாகவும் நிகழலாம்.

ஒரு குழந்தை ஒரு சொல்லை எவ்வாறு கற்றுக்கொள்கின்றது? ஒரு குழந்தை ஒரு புதிய சொல்லை எப்படி அறிமுகமாகிக் கொள்கின்றது? அதாவது ஒரு புதிய சொல்லின் அர்த்தத்தை எவ்வாறு குழந்தை புரிந்து கொள்கின்றது? ஒரு பந்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். அதற்கு முன்னர் பந்து பற்றி குழந்தைக்கு எதுவும் தெரியாது என்றும் எடுத்துக் கொள்வோம். (பந்து என்ற வார்த்தையைக் கிளிப்பிள்ளை போல அந்தக் குழந்தை ஒப்புவிப்பது இங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை).

பந்து என்பதற்கான பொருளை அறிந்து கொள்ள குழந்தை சிலவகை நடத்தைகளை மேற்கொள்கின்றது. ஒருவர் பந்தைச் சுட்டிக்காட்டி இது என்ன என்று குழந்தையிடம்

கேட்டால் அதை ‘பந்து’ என்று சொல்லலாம். ‘இது பந்து’ என்று ஒரு படி அதிகமாகவும் சொல்லலாம். பந்தைப் பற்றிய இந்த அறிவு குழந்தைக்குப் போதுமானதா?

ஆனால், அது அப்படியல்ல. இதை அறிய ஒரு வெளிப்படையான வரையறையில் (Ostensive Definition) கருத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ‘பந்து’ என்று சொல்லத் தெரிவது மட்டும் பந்தைக் குழந்தை (போதியளவு) விளங்கிக் கொண்டதாக அர்த்தமில்லை. ‘மொழியைப் பேசுதல்’ என்றால் பலவிடயங்கள் பற்றித் தெரிந்திருத்தல். பந்தைப் பிடி என்றால் குழந்தை பந்தைப் பிடிக்கும். பந்தை படமாக வரைந்து காட்டு என்றால் வரைந்து காட்டும். பல பொருட்களுக்கு மத்தியில் இருக்கும் ‘பந்தை’ எடுத்து வா என்றால் குழந்தை அதைச் செய்யும். பச்சை நிறமாயின் இது பச்சை நிறப்பந்து என்று கூறும். கதீஜா, கமல் வைத்திருக்கும் பந்துகளை விட தனது பந்து பெரியது எனக் கூறும்.

இவ்வாறான வழிகளில் ‘பந்து’ குறித்துக் குழந்தை சொல்வதற்குத் தெரிந்திருந்தால் அந்தக் குழந்தை பந்து என்ற சொல்லுக்கான பொருளைக் கற்றுக் கொண்டுவிட்டது. தனக்குப் பழக்கமானஇ இடங்களில் மட்டுமல்ல புதிய இடங்களுக்குப் போனாலும் பந்தை அது அறிந்து கொள்ளும்.

இவ்வாறான பயிற்சிகள் (நடத்தைகள்) பல நடந்து சிலகாலத்தின் பின்னர்தான் அந்தக் குழந்தை பந்து என்பதை அறிந்து கொள்கின்றது. ஒரு பொருளின் அர்த்தத்தை தெரிந்திருப்பதற்கான படிமுறைகளாக இதனைக் கூறலாம். அநேக சொற்களுக்கு இது பொருந்தும். ஆகவே மொழியைப் பேசுதல் என்பது பேசுவதும் அதைப் புரிதலுமாகும். சிலவகை நடத்தைச் செயற்பாடுகளிலும் அது தங்கியுள்ளது. அதாவது அதில் பலவகையான திறன்கள் சம்பந்தப்பட்டுள்ளன.

இதைத்தான் விட்கன்ஸ்டைன் ‘வாழ்க்கை வடிவம்’ (Philosophical Investigations (PI): பிரிவு 19, 27, 236) என்று கூறுகின்றார். (George Pitcher, 1985)

ஒரு கூற்றின் அல்லது பதத்தின் அர்த்தத்தை அளவையியல் வடிவத்திற்குள் வரையறைபடுத்தமுடியாது என்ற விட்கன்ஸ்டைனின் கோட்பாட்டை இது விளக்குகின்றது. ‘மொழி விளையாடல் என்பதற்குள் மரபுரீதியாக விபரிக்கப்படும் சொற்களாயினும் அவை பயன்பாட்டுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். இது நாளாந்தம் நாம் பயன்படுத்தும் சொற்களுடன் தொடர்பானது.

சொற்கள் எந்தப் பின்னணியில் (சூழ்நிலையில்) எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதுடன் அதற்கான பொருள் ஒன்று கலந்துள்ளது.

ஒரு மொழியியல் சமூகத்தின் பின்னணியில் இது நிகழ்கின்றது. மரபுரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ‘மொழி விளையாடல்’ வடிவில் இது சாத்தியமாகின்றது. தூண்டுதல்மிக்க கூற்று ஒன்றின் மூலம் விட்கன்ஸ்டைன் இப்பிரச்சினைளை இவ்வாறு வடிவமைக்கின்றார். ‘சிங்கம் பேசுமானால் அதன் பேச்சை எம்மால் புரிந்து

கொள்ளமுடியாது.' (PI: 223). ஏனெனில் சிங்கத்தின் மொழி விளையாடல் எமது மொழி விளையாடலை விட வேறுபட்டது. அதனால் சிங்கத்தின் மொழியை எம்மால் புரிந்து கொள்ளமுடியாது.

**<u>குடும்ப ஒற்றுமை நிலை : உதாரணம்</u>**

வெவ்வேறு விளையாட்டுக்கள் எவ்வாறு விளையாட்டு என்ற பொதுக்கருத்துக்குள் வருகின்றன என்பதை குடும்ப ஒத்ததன்மை அல்லது குடும்ப ஒற்றுமை என்ற எண்ணக்கருவின் மூலமாக விடகன்ஸ்டைன் விளக்க முயல்கிறார்.

ஒரே பெயரால் அழைக்கப்டுகின்ற பல விடயங்கள் (அல்லது பொருட்கள்) ஒரே பண்பை அல்லது ஒரு தொகுதியானது ஒரே விதமான பண்புகளைப் பெற்றுள்ளது என்பதை மறுப்பதற்காகவே 'குடும்ப ஒத்த தன்மை' என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு சொல்லுக்குள் அடங்கும் விடயங்கள் எல்லாம் ஒத்த தன்மைமைகளைக் கொண்டிருக்கும் என்ற பொதுக்கருத்தை இக்கோட்பாடு நிராகரிக்கின்றது. ஆனால்இ பல்வேறு விதத்தில் அவை ஒன்றோடொன்று தொடர்புடைய - ஒத்த தன்மை கொண்டது என்பதை அது ஏற்றுக்கொள்கின்றது.

**<u>சொற்களின் பயன்பாடுளில் வேறுபாடு</u>**

மொழியின் பதங்கள் அல்லது வசனங்கள் அவை வழங்கும் சேவைகளால் தான் அவற்றிக்கான அர்த்தத்தைப் பெறுகின்றன. எமது வாழ்க்கை தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உள்ளாவதை அவதானிக்கின்றோம். மொழிப் பயன்பாடு அல்லது பிரயோகம் மாறிச் செல்ல வாழ்க்கை மாற்றங்களும் கலாசாரமும் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஒரு வகையில் இதை 'நடைமுறை' என்றும் கூறலாம். ஒரு சொல் அது குறித்து நிற்கும் பொருளை விட அது நிகழ்த்தும் 'வேலை' குறிக்கும் பொருள் முக்கியமானது.

இந்த நடைமுறை அர்த்த விளக்கத்தை விட்கன்ஸ்டைன் 'கருவிப் பெட்டி' உதாரணத்தினால் எடுத்துக் காட்டுகின்றார். மொழி ஒரு கருவிப் பெட்டியைப் போல என்பதையே கருவிப்பெட்டி உதாரணத்தில் நாம் காண்கின்றோம்.

எமது வேலையை அல்லது திருத்த வேலையை செய்து முடிக்கஇ கருவிப் பெட்டியில் உள்ள கருவிகளை நாம் பயன்படுத்திக் கொள்வதைப் போன்றது இது. கருவிப் பெட்டிக்குள் இருக்கும் கருவிகளை சிந்தித்துப் பாருங்கள். சுத்தியல், திருகு கருவிகள், ஆணிகள்இ அளவுமட்டம், பசை எனப் பல பொருட்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கருவிகளின் தொழிற்பாட்டைப் போலவே சொற்களின் தொழிற்பாடும் வெவ்வேறானவை என மெய்யியல் ஆய்வு நூலில் விட்கன்ஸ்டைன் விளக்குகின்றார்.

இந்த விளக்கத்தை முன்னரும் நாம் கலந்துரையாடியுள்ளோம். இன்னும் இதில் சிந்திக்க பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாக 'நல்லது' என்ற பதத்தைப் பார்ப்போம். இந்தச் சொல்லை நாம் பயன்படுத்தும் இடங்கள் வெவ்வேறானவை. அப்படியானால் நல்லது என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இதற்கு நாம் ஒரு பொது அர்தத்தை தருவது எவ்வாறு? (i) அர்ச்சுனாவும் முரளிதரனும் நல்ல கிரிக்கட் வீரர்கள் (ii) அது நல்ல நடத்தை (iii) செம்மீன் நல்ல நாவல் (iv) அது நல்ல ஆட்சி (v) ஹசன் நல்ல வைத்தியர் (vi) செம்மீன் ''நல்லது'' பல வகையாகப் பயன்படுத்தபட்டுள்ளதற்கு இவை நல்ல உதாரணங்கள். நல்லது இவ்வாறு பயன்படுத்தப்பட்டதில் நாம் காணக்கூடிய பொதுத்தன்மை என்ன? ஒற்றை நிலையை விட பல தன்மைகளில் இடம் நோக்கி நல்லதுஇ பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது பல வேறுபாடுகள் இவற்றில் உள்ளன என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக இலகுவில் கூறலாம்.

ஆனால் இவ்வேறுபாடுகளைக் கடந்து இவற்றுக்கிடையில் வெளிப்படையான ஒத்த தன்மை (பொதுப் பண்புகள்) இருக்கின்றன. விட்கன்ஸ்டைனின் 'குடும்ப ஒருமைப்பாடு' எண்ணக்கரு இதைத்தான் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

ஏன் பல்வேறு விடயங்களுக்காக ஒரு சொல் பயன்படுத்தப்படுகின்றது. அவற்றிடையே ஒற்றைச் சாராம்சம் இல்லை என்றாலும் 'குடும்ப ஒத்த தன்மைகள்' இருக்கின்றன. இதற்கான உதாரணமாக விளையாட்டுக்கள் காட்டப்படுகின்றன.

ஒன்றின் மேல் ஒன்று குறுக்காகச் செல்லும் வகையில் ஒரு சிக்கலான வலையமைப்பை இதில் காண்கின்றோம்: சில வேளைகளில், ஒட்டு மொத்த ஒற்றுமைகள் என்பதில் 'குடும்ப ஒத்த தன்மையை' விட வேறுவகையான எந்த உதாரணமும் இதற்குப் பொருந்தாது. உடற்கட்டமைப்பு, கண்களின் நிறம், நடக்கும் விதம், மனோ நிலை, என பலவற்றைக் குறிப்பிடலாம். 'விளையாட்டுக்கள் குடும்பத்தை உருவாக்குவதாக நான் சொல்வேன்' (PI, பிரிவு: 66 – 67). ஒரு குடும்பத்தில் ஐந்து அங்கத்தவர்கள் என்றால் உயரம், நிறம், பருமன், நடை என்பன  பொதுவாக ஒரேவிதமாக இருப்பதில்லை.

எனவே, வெவ்வேறு விடயங்களின் வியாபித்தலுக்கும் பொதுவான ஒரு சொல்லைப் பயன்படுத்துவதற்கும் ஏற்றதான நியாயம் இருப்பதை இது காட்டுகின்றது. (பார்க்க: George Pitcher,1985).

இந்தவித நடவடிக்கைக்கு விட்கன்ஸ்டைன் 'விளையாட்டுக்கள்' எனும் பதம் பொருத்தமானதென்று கூறுகின்றார்.

இவை எல்லாவற்றுக்குமான 'பொது' நிலை என்ன? நன்றாக கவனித்துப் பார்த்துச் சொல்லுங்கள். அங்கு எதாவது பொதுத்தன்மைகள் உள்ளனவா? ஆனால் ஒற்றுமைகள், தொடர்புகள் போன்றவை அமைந்திருக்கும். அவற்றை நீங்கள் நன்கு கவனித்துப்

பார்த்தால் பொதுத் தன்மைகள் எதுவும் இல்லாதிருப்பதைப் பார்ப்பீர்கள். சிந்திக்க வேண்டாம் ஆனால் பாருங்கள் என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார்.

(i) தாள் கூட்ட (சீட்டு) விளையாட்டுக்களைப் பாருங்கள். (பலவகை)

(ii) பலகை விளையாட்டுக்களைப் பாருங்கள். (பலவகை)

(iii) பந்து விளையாட்டுக்களைப் பாருங்கள். (பலவகை)

இன்னும் பல வகை விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம். இந்த ஒவ்வொரு விளையாட்டிற்குள்ளேயும் பல வகை விளையாட்டுக்கள் உள்ளன.

விளையாட்டு என்பது ஒரு இன அல்லது வர்க்கப்பதம். விளையாட்டு என்ற எண்ணக்கரு ஒரு இன எண்ணக்கரு (Genus Concept) 'விளையாட்டு வகைகள்' இதற்குள் வருகின்றன. ஆனால் எல்லா பொதுப் பதங்களும் வர்க்கப்பதம் அல்ல. இன அல்லது வர்க்கப் பதத்திற்கு ஒற்றையான அர்த்தம் இல்லை என்று அதற்குப் பொருள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் விட்கன்ஸ்டைன் 'விளையாட்டு' என்ற பதத்தைக் குடும்ப ஒருமைப்பாட்டுடன் சமப்படுத்துகின்றார். குடும்ப அங்கத்தவர்களிடையே எவ்வாறு தொடர்புகள், உறவுகள், சம தன்மைகள், ஒற்றுமைகள் இருக்கின்றனவோ அவற்றுடன் விளையாட்டையும் ஒப்பிடுகின்றார். 'விளையாட்டு' என்ற ஒரு சொல்லில் ஒற்றுமைத் தன்மை உள்ள பல விளையாட்டுக்கள் ஒன்று கலந்துள்ளன. ஒரு குடும்ப அங்கத்தவர்கள் ஒரே விதமான சமமான தன்மைகளை பெற்றிராததைப் போல் பொதுமைக் கோட்பாட்டுப் பிரச்சினைக்கு விட்கன்ஸ்டைனின் இந்த முயற்சி ஒரு தீர்வாக அமைந்துள்ளது. (பார்க்க: Mamani Kalite , 2020)

'குடும்பம்', 'விளையாட்டு' இவற்றை ஒத்த பொதுப் பதங்களில் ஒற்றைப் பொருள் இல்லை என்பதை 'குடும்ப ஒற்றுமை' கருத்து விளக்குகின்றது. உதாரணம் மூலமாக இதைப் பார்ப்போம்: 'விளையாட்டு' எனும் பதம் ஒற்றை அர்த்தத்தை கொண்டிருக்கவில்லை. அதற்கான காரணம் இது தான். $C_1$, $C_2$, $C_3$,… என விளையாட்டிற்கான பண்புகள் வரையறுக்கப்பட்டு (விதிகள், வெற்றி- தோல்வி, விளையாட்டு வீரர்கள் பெற்றிருக்க வேண்டிய பொதுப் பயிற்சியாளர்) இருக்குமானால் எல்லா விளையாட்டுகளுக்குமான தவிர்க்க முடியாத விதிகள், பண்புகள் இவையாக இருந்தால் விளையாட்டிற்கு ஒரு ஒற்றைப் பொருள் இருப்பதாக கருதலாம். $C_1$ லிருந்து $C_{11}$ வரையிலான இந்தப் பண்புகளை விளையாட்டுக்கள் பெறாத போது அங்கு பிரச்சினை உருவாகிறது. $C_1$, $C_2$ மற்றும் $C_7$ என்ற பண்புகள் மட்டும் கொண்ட விளையாட்டு, $C_1$, $C_3$> $C_6$ மட்டும் கொண்ட விளையாட்டு, $C_2$, $C_5$, $C_6$ மட்டும் கொண்ட விளையாட்டு என்ற வேறுபாடுகள் இருக்கின்றன என்ற நிலை ஏற்படுமானால் இன்னொரு வகையில் அங்கு ஒரு ஒழுங்கு உருவாகின்றது. (பார்க்க: George Pitcher,1985).

விளையாட்டு என்ற அடையாளத்தைப் பெற $C_1$ முதல் $C_{11}$ வரையிலான பண்புகளில் (நிபந்தனைகளில்) எவையேனும் சிலவற்றின் கொத்தணி (Cluster) அமையுமாக இருந்தால் அவ்வாறானவை 'விளையாட்டு' இனத்திற்குரியவையாகின்றன.

ஒரே சீர்மையான பண்புகள் கொத்தணியாகி இருப்பதுமில்லை. ஆனால் ஒன்றுடன் ஒன்று கலந்ததாக, ஒன்றை ஒன்று குறுக்கறுத்துச் செல்வதாக இருப்பது தான் அதிகம் உள்ளன. எல்லா விளையாட்டுக்களும் பொதுவான பண்புகள் என்று சுட்டிக்காட்ட அங்கு அதிக உதாரணங்கள் கிடைப்பதில்லை.

'குடும்ப ஒற்றுமை' எண்ணக்கரு மூலமும், 'மொழி விளையாட்டு' மூலமும் மொழியில் உருவாகும் தவறான எண்ணங்களைத் தீர்த்து வைப்பதே விட்கன்ஸ்டைனின் நோக்கமாக இருந்தது. மொழியின் ஒருமைப்பாடுகளை மட்டுமன்றி மொழியின் வேறுபாடுகளையும் மொழி விளையாட்டின் மூலம் விட்கன்ஸ்டைன் வெளிப்படுத்தினார்.

சொற்களும் வசனங்களும் செயற்படும் போது ஒரு பொருளுக்கு மாத்திரம் அவை வரையறுக்கப்படுவதில்லை. மெய்யியல் ஆய்வு நூலில் கருவிப் பெட்டியை (Tool Box) இதற்கு உதாரணமாகக் காட்டுகின்றார். மீண்டும் அந்த உதாரணத்தை பார்ப்போம்.

கருவிகள் இருக்கும் ஒரு கருவிப் பெட்டியைச் சிந்தியுங்கள்: ஒரு சுத்தியல், இடுக்கி, ஒரு வாள், ஒரு திருகு கருவி, ஒரு அடிக்கோல், ஒரு பசைப் பாத்திரம், பசை, ஆணிகள், திருகுகள் உள்ளன. இந்தப் பொருள்களைப் போன்றே சொற்களின் செயற்பாடுகளும் வேறுபட்டவை (PI-11).

இவையன்றி வார்த்தைகளால் நாம் பல்வேறு வேலைகளைச் செய்கின்றோம். கேலி செய்வது, நன்றி சொல்வது, திட்டுவது, சபிப்பது, வாழ்த்துவது, பிரார்த்திப்பதுஇ இரக்கம் தெரிவிப்பது இப்படிப் பலவற்றிக்கு மொழி பயன்படுகின்றது. பெயர்கள் பொருட்களைக் குறிக்கும். அதாவது மொழி பொருட்களைக் குறிக்கின்றது என்பது இனியும் ஏற்கக் கூடியதா? என்றும் விட்கன்ஸ்டைன் கேள்வி எழுப்புகின்றார்.

மொழி பற்றிய தவறான எண்ணங்களை மொழி விளையாட்டு மற்றும் குடும்ப ஒத்த தன்மை எண்ணக்கருக்கள் மூலமாகத் தீர்த்து வைப்பதே விட்கன்ஸ்டைனின் நோக்கம். அவரது மொழி மெய்யியலை மொழி "வைத்திய நிவாரணம்" என்று சொல்லப்படுவதுண்டு. ''ஒருமைப்பாடான பண்புகள் மட்டுமல்ல ஒருமைப்பாடற்ற பண்புகளும் எமது மொழியில் (பதங்களில்) உள்ளன'' என்பதைத் தான் விளையாட்டு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

'மொழி விடுமுறையில் செல்லும் போது மெய்யியல் பிரச்சினைகள் தோன்றுகின்றன' என்று விட்கன்ஸ்டைன் கூறுவதன் பொருள்இ பிரயோக (நடைமுறை) சூழலில் இருந்து மொழி தனிமைப்படுத்தப்பட்டு விடுகின்றது என்பதைத்தான் குறிக்கின்றது.

வெவ்வேறு பின்னணிகளில், சந்தர்ப்பங்களில் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்குவதற்காக "மொழி விளையாடல்" எண்ணக்கருவை விட்கன்ஸடைன் பயன்படுத்தினார். நிரந்தரமான, விட்டுக் கொடுப்பிற்கிடமற்ற அர்த்தம் என எதுவும் மொழிக்கு இல்லை. வெவ்வேறு சமூக நடவடிக்கைகளில் மொழி எவ்வாறு செயற்படுகிறது என்பதிலிருந்து அர்த்த வெளிப்பாடு நிகழ்கிறது. இது பார்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு மொழி விளையாட்டும் அவற்றிற்கான வெவ்வேறு விதிகளைக் கொண்டுள்ளன, மரபுகளும் உள்ளன. சொற்களும் வசனங்களும் குறித்த விளையாட்டுக்களால்தான் தீர்மானிக்கப்படுகின்றன.

அர்த்தத்தை விளங்கிக் கொள்வது முக்கியமானது. ஆனால் அதற்கான பின்னணி அறியப்பட வேண்டும். மொழியின் அர்த்தம் நிரந்தரமானது அல்ல என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார். குறித்த ஒரு சமூதாயத்தின் சமூக மற்றும் மொழி நடவடிக்ககைகளில்தான் மொழியின் அர்த்தம் தங்கி உள்ளது. எந்தப் பின்னணியில் நடவடிக்கைகளில் ஒரு சொல் அல்லது வசனம் பயன்படுத்தப்படுகிறதோ அதற்கு ஏற்ப அர்த்தங்களும் வேறுபடும்.

வெவ்வேறு பின்னணிகளில் மொழியின் அர்த்தம் வெளித் தொடர்புச் சாதனமாகவும் அது விளங்குகின்றது. விட்கன்ஸ்டைனின் மொழிக் கோட்பாட்டின் விளக்கங்கள் இவை. மொழியின் அர்த்தத்தில் பயன்பாட்டுக்குரிய பங்கு என்ன என்பதை விட்கன்ஸ்டைனின் சாதாரண மொழிக் கோட்பாட்டில் நாம் பார்க்கிறோம். ஒரு சொல்லின் அல்லது ஒரு வசனத்தின் அர்த்தம் சமூகத்தினாலும் மொழி சார்ந்த நடவடிக்கைகளாலும் தீர்மானிக்கப்படுகிறது. இதன் பொருள் அர்த்தம் நிரந்தரமானதல்ல என்பதாகும்.

**மொழியும் யதார்த்தமும்**

மொழியின் வரையறை (Limits of Language) விட்கன்ஸ்டைனின் மற்றொரு மொழியியல் எண்ணக்கரு. எம்மைச் சூழ இருக்கும் உலகை விபரிப்பதற்கு மொழியை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் யதார்த்தத்தின் சிக்கல்களையும் உட்பொதிந்திருக்கும் பண்புகளையும் மொழி முழுமையாயக் கொண்டுவரக்கூடியதல்ல. அதனால் யதார்த்தத்தை விளக்குவதறக் நாம் பயன்படுத்தும் மொழி வரையறைக்குட்பட்டது. யதார்த்தத்தின் இலக்கைக் கட்டியெழுப்பும் தொழிற்பாட்டிலும் மொழிக்குப் பங்குண்டு. மொழியானது சிந்தனைகளில் இருந்து விலகி இருக்கும் மாறாத முடிவுப் பொருள் அல்ல. யதார்த்தம் எமது மொழியினாலும் சமூக செயற்பாடுகளாலும் கட்டியெழுப்பபப்டுகிறது. நாம் கையாளும் எண்ணக்கருக்கள்இ பயன்படுத்தும் மொழி என்பவற்றினால்தான் யதார்த்தம் பற்றிய எமது புரிதல் வடிவமைக்கப்படுகிறது. ஒவ்வொரு வேறுபட்ட சமூதாயமும் அவற்றிக்கான மொழி, கலாசார நடவடிக்கைகளால் வேறுபட்ட விதமாக யதார்த்தத்தைப் புரிதல் அமையலாம்.

மொழி பற்றிய விட்கன்ஸ்டைனின் கோட்பாடுகள் யதார்த்தத்திற்கும் மொழிக்கும் இடையிலான சிக்கலை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எம்மைச்சூழ உள்ள உலகைப் புரிந்து கொள்வதில் கலாசாரத்தினதும் பின்னணிகளதும் வகிபாகத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தையும் அவரது கோட்பாடுகள் எமக்குக் காட்டுகின்றன.

**வாழ்க்கைக் கோலம் : மொழியும் பண்பாடும்**

விட்கன்ஸ்டைனின் பிந்திய மெய்யியல் தீர்க்கமாகவே மானுட மையத்தைக் கொண்டிருந்தது. அர்த்தம், பேச்சு மொழியின் குறிப்பிடத்தக்க வரைவிலக்கணம் என்பவற்றில் இன்னும் ஆர்வம் குறையாதிருந்தாலும் தற்போது தொடக்கப் புள்ளியாக இருப்பது நிறைவான அளவையியல் (Ideal Logic) அல்ல. மானிடத் தொடர்பாடலின் பண்புகள் அதில் உள்ளன. மானுடக் கூறு ஆச்சரியமான வழியில் இங்கு இடம்பெறுகிறது. தர்க்கப் புலனெறி வாதங்களில் இருந்து புலன்தரவுக் கோட்பாட்டில் (Theory of Sensedata) இருந்து மானுடவியலின் "வாழ்க்கைக் கோலம்" (Form of life) நோக்கி இடப் பெயர்வு நிகழ்வதையும் அவதானிக்க முடிகிறது. (Roger Scruton, 1984).

பிரீகே, ரசல் ஊடான உண்மை பற்றிய நிறைவான அளவையியல் கட்டமைப்பிலிருந்து மானுடத் தொடர்பாடல் நிகழும் "வாழ்க்கை வடிவம்" என்ற விட்கன்ஸ்டைனின் கருத்து மானுட மையத்திற்கான அடிப்படை எனலாம்.

விட்கன்ஸ்டைனின் பிந்திய மெய்யியலை விளங்கிக் கொள்வதற்கும் அதை நயப்பதற்கும் "வாழ்க்கை வடிவம்" ஒரு முக்கிய கோட்பாடாகும். அர்த்தம், பயன் என்ற எண்ணக்கருக்களை விளங்குவதற்கும் "வாழ்க்கை வடிவ" எண்ணக்கரு ஒரு அடிப்படையைத் தருகிறது. எனினும் அது ஒரு நுணுக்க முறையில் அமைந்த சொல் என்பதை விட விரிவான பொருள் தரக்கூடியது. What has to be accepted, the giving, is- so one could say forms of life" (Witt,1953:226 E). கொடுக்கப்பட்டதில் ஏற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால் - வாழ்க்கையின் வடிவங்களை என்று ஒருவர் கூறலாம். (விட்கன்ஸ்டைன், 1953, ).

பேர்ணாட் வில்லியம்ஸின் கூற்று ஒன்று இவ்வாறு நினைவூட்டப்படுகின்றது. விட்கன்ஸ்டைனின் கண்ணோக்கில் மொழி என்பது இணைந்திருப்பது, புலனீடான சமூகச் செயற்பாட்டின் மூலமாக மொழியின் அர்த்தத்தை விளங்க வைக்க "வாழ்க்கை வடிவம்" என்ற கருத்தாக்கத்தை மெய்யியல் ஆய்வு நூல் முன் வைத்திருப்பதாக கருதலாம். விட்கன்ஸ்டைனின் கருத்துப்படி ஒரு பதத்தின் அர்த்தத்தை அதன் தனிமைப்படுத்தலில் இருந்து புரிந்து கொள்ள முடியாது. மொழி விளையாடலில் அந்தப் பதம் பயன்படும் விதம் அவதானிக்கப்பட வேண்டும். இவ்வாறு அவதானிக்கப்படுவதன் மூலமாக பதம் ஒன்று அவதானிப்பவர் மொழியின் சமூகச் செயற்பாட்டைப புரிந்து கொள்ள வாய்ப்பேறப்டுகிறது.

வாழ்க்கை வடிவத்தில்தான் மொழி இணைக்கப்பட்டுள்ளது. எந்த மொழி விசாரணைக்கும் இது இன்றியமையாதது என்பதைத்தான் விட்கன்ஸ்டைனின் கருத்துக்கள் உணர்த்துகின்றன. மொழி பற்றிய கற்பனை என்பது வாழ்க்கை வடிவத்தின் கற்பனை என்று மெய்யியல் ஆய்வு நூலில் கூறும் போதும் மொழியை பயன்பாட்டுடன் இணைத்துப் பார்க்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தும் போதும் இது தெளிவாகிறது.

வாழ்க்கை வடிவம் ஒரு சமுதாயப் பின்னணியையும் மொழிப் பயன்பாட்டிற்கு கலாசார சுற்றாடலின் தேவையையும் வலியுறுத்துகிறது. அதாவது மொழி என்பது சமூகச் செயற்பாட்டின் அல்லது நடைமுறையின் ஒரு பாகமாக உள்ளது. இந்த சமூக நடைமுறையில் தேர்ச்சி இல்லாதவரால் மொழியின் பொருளை சரியாக அறிய வாயப்பு இல்லை என்பதுதான் இதன் விளக்கம்

"சிங்கத்தினால் பேச முடிந்தால் அதை எங்களால் விளங்கிக் கொள்ள முடியாது" (P.I 11 xi) என்ற விட்கன்ஸ்டைனின் கூற்றுத் தரும் விளக்கமும் அதுதான். சிங்கம் பேசினால், சிங்கத்தின் சமூகப் பின்னணியை அறிந்த ஒருவராலேயே அப்பேச்சைப் புரிந்துகொள்ளமுடியும் என்றும் இதற்கு பொருள் கொள்ளலாம்.

சரியாகக் கூறுவதானால் விட்கன்ஸ்டைனுக்கு மொழி ஒரு தொடர்புசாதனம் மட்டும் அல்ல. எமது எல்லா உலக அனுபவங்களையும் உள்ளடக்கியதுதான் மொழி என்று கொள்ளவேண்டும்.

"என் மொழியின் வரம்புகள்தான் என் உலகின் எல்லைகள்" (Tractatus, 184) என்று ரெக்டேடஸில் விட்கன்ஸ்டைன் கூறுவது மொழியுடன் சமூகத்திற்கும் உலகததுக்குமான தொடர்பைப் பற்றித்தான் என்பது வெளிப்படை.

மெய்யியல் ஆய்வு நூலில் சில தடவைகள் மட்டுமே "வாழ்க்கைக் கோலம்" என்ற கருத்தை விட்கன்ஸ்டைன் பயன்படுத்தி இருந்தாலும் அது அவரது பிந்திய மெய்யியலில் மனித வாழ்வின் சமூக வலைப் பின்னலுடன் அர்த்தம் பெற்றிருக்கும் இடத்தை ஆழமாகப் பாாப்பதற்கான தூண்டுதலாக அமைந்துள்ளது.

தாம் கூறிய பின்வரும் கருத்துக்களில் இறுதி வரை விட்கன்ஸ்டைன் உறுதியாக இருந்துள்ளார்.

(1) முதலில், மொழி உலகிற்கு பெயரிடும் கருவி அல்ல. சமூக விலங்குகள் (Homo Sapiens) தமது உயிரினங்களுடன் வாழ்வதற்கும் உலகில் செயற்படுவதற்குமான கருவிதான் மொழி. மொழி தொடர்பாடல் கருவி மட்டுமல்லஇ சமூக நடைமுறையின் ஒரு பகுதி அது.

(2) மொழி மனித மொழியாக இருப்பதால், ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் மொழி, அதன் அடிப்படையிலேயே அந்த உயிரினம் மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தும் சில பண்புகளைக் கொண்டுள்ளது.

(3) மொழி, அந்த வகையில் அதைப் பேசும் உயிரினத்தின் பண்புகளால் மட்டுமல்ல அந்த உயிரினம் வாழும் கோள்களின் பண்புகளையும் ஆழமாகக் குறிப்பிடுகிறது. (Gaving Kitching ,2003)

விபரிப்புத்தேவைக்காக மட்டுமல்ல, பல வகைகளில் மொழி பயன்படுத்தப்படுகின்றது. பல வகையான மொழி விளையாட்டுக்கள் உள்ளன என்று விட்கன்டைன் இதனை விபரிக்கிறார். மெய்யியல் ஆய்வு நூலில் அவர் கூறும் ஒரு கருத்தை நோக்குவோம் : “எத்தனை வகையான வாக்கியங்கள் உள்ளன: வலியுறுத்தும், கேள்வி எழுப்பும், கட்டளை இடும் வகையிலான எண்ணற்ற வகை வாக்கியங்கள் உள்ளன. இந்தப் பன்மை நிலையும் நிலையானதல்ல. என்றைக்குமானதல்ல. ஆனால் புதியவகை மொழி, புதிய மொழி விளையாடல்கள் நடைமுறைக்கு வருகின்றன. மற்றவை வழக்கொழிந்து மறைகின்றன.

மெய்யியலில் சாதாரண அல்லது இயற்கை மொழியுடன் எமது விபரிப்புக்களை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கண்ணோக்கை பிந்திய - விட்கன்ஸ்டைன் வலியுறுத்தினார். அதனால், மெய்யியல் முறையியலின் தன்மையும் அளவையியலின் வகிபாகமும் மாற்றமடைகின்றன.

மொழியின் வேறுபட்ட பன்முகத் தன்மையை விட்கன்ஸ்டைன் அங்கீகரிக்கிறார். தவிர்க்க முடியாத வகையில் மெய்யியலின் இலக்கு மாற்றப்படுகின்றது (Samuvele E. Stumpf,1994). தெளிவின்மையால் மெய்யியலில் ஏற்படும் குழப்பங்களை கையாள்வது மெய்யியலின் பணியாக வேண்டும் என்பது ஒரு மரபு போல் ஏற்கப்படுகிறது.

‘மொழி எமது அறிவில் ஏற்படுத்தும் மயக்கத்துக்கு எதிரான போராட்டம் தான் மெய்யியல்’ என்று விட்கன்ஸ்டைன் கூறினார். மயக்கம் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. எனக்கு என் வழி தெரியவில்லை. அந்த வழியைக் கண்டறிய மெய்யியல் உதவுகிறது. சொற்களின் பயன்பாடு கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. புதிய தகவல்களையோ அல்லது அதிகமான தகவல்களையோ அறியத்தருவதல்ல மெய்யியல். மொழியைக் கவனமாக விபரிப்பதன் மூலம் தெளிவைத் தருவதுதான் மெய்யியல் என்பது ஒரு விதி போல் ஆகியது.

**மெய்யியலின் நோக்கம்**

‘மெய்யியலில் உங்கள் நோக்கம் என்ன? ஈக்கள் அடைக்கப்பட்டுள்ள போத்தலுக்குள் இருந்து ஈக்களை வெளியேற்றுவதுதான்’

விட்கன்ஸ்டைனின் புதிய மெய்யியலையும் அதற்கான அணுகு முறையையும் சரியாகக் கூறும் இவ் வரிகளின் சொந்தக்காரர் அவர்தான். அறிவு நோயில் இருந்து ஒருவன் விடுவிக்கப்படுவது போத்தலுக்குள் இருக்கும் ஈயை அதற்குள் இருந்து வெளியேற்றுவதற்குச் சமமானது என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார்.

இந்த நோயிலிருந்து விடுபடும் வழி என்ன? விட்கன்ஸ்டைனின் பதிலைப் பார்ப்போம்.

மெய்யியல் புதிர்களில் உள்ள முக்கியமான வார்த்தைகள், அவை பயன்படுத்தப்படும் உண்மையான வழிகளை நாம் ஆராய வேண்டும். இந்தப் புதிர்களில் குறைந்த பட்சம் சிலவற்றையாவது நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம். அதனால் மொழி பயன்படும்

விதம் பற்றித் தவறானதும் மிக எளிமைப்படுத்தப்பட்டதுமான பார்வையை நாம் கொண்டிருக்கிறோம். எவ்வாறு எமது கொள்கைகள் செயற்படுகின்றன. அவற்றின் உண்மையான பயன்பாடு என்ன என்பதை அறிவதன் மூலம் இவ்வகைப் புதிர்களுக்கான தீர்வுகளைக் காணலாம் என்று விட்கன்ஸ்டைன் கருதுகிறார். (பார்க்க : G. Pitcher, 1985).

மெய்யியல் ஆய்வில் அவர் கூறும் பின்வரும் கூற்றையும் இங்கு நோக்கலாம் : 'மெய்யியல் பிரச்சினைகள் அனுபவ ரீதியான பிரச்சினைகள் அல்ல. மாறாக, நமது மொழியின் செயற்பாடுகளை அறிவதன் மூலமும் அவற்றை அடையாளம் காண்பதன் மூலமும் அப்பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன' (PI - 109).

மொழியின் பயன்பாடு, மொழி விளையாட்டு போன்ற எண்ணக்கருக்கள் ஊடாகத் தனது அணுகு முறையினால் மொழியின் அர்த்தத்தை சரியாக இனங்காண்பதற்கு முடியும் என்றும் அவர் நம்பினார்.

ஒரு சொல்லின் பொருள் அதன் பயன்படுத்தலில் தங்கி உள்ளது. மொழியின் அல்லது சொல் ஒன்றின் பொருள் பல்வேறு நடவடிக்கைகளில் அதன் தொழிற்பாட்டினால் தான் புரிந்து கொள்ளப் பட வேண்டும் என்பதை இரண்டாம் கட்டச் சிந்தனைகள் இவற்றை வலியுறுத்துகின்றன. மனித வாழ்க்கையில் மொழியின் செயற்பாடு என்பதையே அவர் வலியுறுத்துகிறார் எனக் கருதலாம்.

**அர்த்தக் கோட்பாடு**

மூலக் கூற்று எடுப்புக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்குவதும் இறுதிப் பகுப்பாய்வைக் கைவிடுவதும் விட்கன்ஸ்டைனின் மொழி பற்றிய முந்தைய கருத்தாக்கத்தை முழுமையாக நிராகரிப்பதாகும். தொடக்க கால விட்கன்ஸ்டைன் மொழியின் தொழிற்பாடு நேர்வுகளின் படங்கள் என்றார். தெளிவான தர்க்க கட்டமைப்பை தொடர்புபடுத்தினார்.

'இந்த உலகம் நேர்வுகளாகப் பிரிந்துள்ளது' (T : 1, 2). இந்த நேர்வுகள் - நிகழ்வுகளைத் தோற்றுவிப்பவை. இவை அணு நேர்வுகளால் சேர்ந்துள்ள பொருட்களின் இணைவாகும். அணுக்கட்டமைப்பிலிருந்து நேர்வுகளின் படங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்தப் படங்கள் புறமெய்மையின் (யதார்த்தத்தின்) காட்டுருக்களாகும். மனித அறிவு கட்டியெழுப்பப்படும் அமைப்பை இது பெற்றுள்ளது (பார்க்க : Direnc Ersahin, 2007).

சமதன்மையான கட்டமைப்பு மொழிக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் பாலமாக இருப்பதை விட்கன்ஸ்டைனின் படக்கோட்பாடு குறிப்பிடுகிறது. யதார்த்தமும் மொழியும் அணு எடுப்புக்களால் ஆக்கப்பட்டவை. யதார்த்தம் அல்லது புற மெய்மைப் பொருட்களாலானது. மொழி மொழியினால் ஆக்கப்படட்டவை, யதார்த்தத்தை படமாக்குகிறது மொழி.

மொழிக் கூறுகளின் சேர்க்கைகள் புற மெய்மையின் கூறுகளின் சேர்க்கைககளோடு ஒத்ததாயமைகின்றன என்று இதைக் கூறலாம். ஒவ்வொரு எடுப்பும் தனித்த மூல

எடுப்புகளால்தான் உருவாகின்றன. மூலக் கூற்றுக்கள் எளிய பொருட்களைக் குறிக்கின்றன. ஒரு சொல்லின் அர்த்தம் அது என்ன பெயரைக் கொண்டுள்ளது என்பதில்தான் தங்கி உள்ளது என்று இது எடுத்துக் கொள்ளப்பட்டது. தனியன்களான குறித்த வகைப் படங்கள் தான் மனித மொழியின் சாரம். இதுதான் ரெக்டேடஸில் முன்மொழியப்பட்ட கருத்துக்கள். இதை விட்கன்ஸ்டைன் நன்குணர்ந்திருந்தார். மொழியின் தனித்தனிச் சொற்கள் பொருளுக்கான பெயர்களாக நிற்கின்றன. அந்தச் சொல் குறித்து நிற்கும் பொருள் அதன் அர்த்தமாகிறது.

மெய்யியல் ஆய்வுகள் நூலின் பெரும்பகுதி மொழியின் பொருள் பற்றிய இந்தக் கருத்திற்கு எதிரானதாகும். அதாவது எளிய ஒகஸ்டீனிய மொழி எண்ணக் கருவுக்கு அது எதிரானது.

பொருட்களின் பெயர்களைக் கற்றுக் கொள்வதுதான் மொழியைப் புரிந்து கொள்வதற்கான வழி என்று ஒகஸ்டீன் கூறினார். ரெக்டேடஸின் ஆசிரியர் உள்ளிட்ட மரபுரீதியான மெய்யியலாளர்கள் அனைவரும் இதைத்தான் நம்பினர் (K.T.Fann, 1969).

தனது ஆய்வு நூலில், மொழி பற்றிய தனது முன்னைய கொள்கையை விட்கன்ஸ்டைன் இவ்வாறுதான் விமர்சித்தார். மேசை, கதிரை, ஆப்பிள் போன்ற பொருட்களின் பெயர்ச் சொற்களும் மனிதர்களின் பெயர்களும் மட்டும் அல்ல ஐந்து, விரைவாக, அல்லது பலவகைச் சொற்கள் இன்னும் உள்ளன என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார்.

மெய்யியல் ஆய்வுகள் நூலின் முதலாவது பிரிவில் எவ்வாறு ஒரு கரடுமுரடான பாதையில் அவர் பயணிக்க உள்ளார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறார். ஒகஸ்டினின் “Confessions” இல் இருந்து ஒரு பகுதியை எடுத்துக்காட்டாகக் கொண்டு மொழியானது பெயரை மட்டும் கொண்டிருக்கும் ஒரு படிமுறையைக் கொண்டதல்ல என்று தனது விமர்சனங்களை முன்வைக்கின்றார். பிந்திய விட்கன்ஸ்டைனின் கருத்துப்படி “மொழிப் பயன்பாடு என்பது பொருட்களுக்குப் பெயரிடும் சாதாரண செயற்பாடு அல்ல.” அது ஒரு விளையாட்டாக மொழி விளையாட்டாக கொள்ளப்படவேண்டும் (Direnc Ersahin, 2007).

> “கொன்பெசன்ஸ்” இல் இருந்து விட்கன்ஸ்டைன் முன்வைக்கும் உதாரணத்தைப் பார்ப்போம். பெரியவர்கள் ஏதாவது ஒரு பொருளைப் பெயரிட்டு அதற்கேற்ப அவர்கள் அதை நோக்கி நகரும் போது நான் இதைக் கண்டேன். அவர்கள் அதைச் சுட்டிக்காட்டும் போது அவர்கள் உச்சரித்த ஒலியால் அவர்கள் சொன்னது சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறு பல்வேறு வாக்கியங்கிகளில் அந்தச் சொற்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதைக் கேட்டதால் அந்த ஒலிகள் எதைக் குறித்தன என்பதை நான் படிப்படியாகக் கற்றுக் கொண்டேன். மேலும் இந்தக் குறிகளை உருவாக்கிக் கொள்ள எனது வாயை பயிற்றுவித்தேன். (PI : 1).

இது குறித்து விட்கன்ஸ்டைன் பின்வருமாறு கூறுகிறார் : மனித மொழி பற்றிய சாரத்தின் ஒரு குறித்த பாடத்தை இது நமக்குத் தருவதாகத் தோன்றுகிறது:

மொழியின் சொற்கள் யாவும் பொருட்களின் மெய்களாகும். வாக்கியங்கள் அத்தகைய பெயர்களின் தொகுப்புகளாகும். மொழி பற்றிய இச்சித்திரத்தில் பின்வரும் கருத்து முளை விடுவதைக் காணலாம். ஒவ்வெரு சொல்லுக்கும் ஒரு அர்த்தம் உள்ளது. இந்த அர்த்தம் சொல்லோடு இணைக்கப்பட்டுள்ளது. சொல் எந்தப் பொருளுக்காக நிற்கிறதோ அந்தப் பொருளே இந்த அர்த்தமாகும் (பார்க்க: செ.வே. காசிநாதன், 2021).

செ.வே. காசிநாதன் தரும் பின்வரும் விளக்கத்தையும் இங்கு பார்க்கலாம்: கருத்துப் பரிவர்த்தனை முறை ஒன்றை ஒகஸ்தீன் இங்கு வருணிக்கிறார் என நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நாம் மொழி என அழைக்கும் அனைத்துக்கும் ஒகஸ்தீனது இவ்வருணனை பொருந்தாது. முன்னைய ரெக்டேடஸ் மொழி கோட்ப்பாட்டிலிருந்து விட்கன்ஸ்டைன் எவ்வளவு தூரம் விலகிச் சென்று ஒரு புதிய கருத்தை உருவாக்கிறார் என்பதற்கும் இது ஒரு சான்றுதான்.

மெய்யியல் ஆய்வு நூலில் விட்கன்ஸ்டைன் தரும் கீழ்வரும் கூற்று இதற்கான அடிப்படையான விளக்கம் எனக் கருதலாம் சொற்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றி ஒகஸ்தீன் எதையுமே சொல்லவில்லை. மொழியைப் பயில்வதை இவ்வாறு வர்ணிக்க முயல்வோர், மனிதர்களது பெயர்களையும் மேசை, நாற்காலி போன்ற பெயர்ச் சொற்களையும் மட்டுமே பிரதானமாகக் கருத்தில் கொள்கின்றனர். என நான் நம்புகிறேன் இரண்டாவதாக, சில செயல்களையும் குணங்களையும் கருத்தில் கொண்ட பின், ஏனையவகைச் சொற்களைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை எனவும் எடுத்துக் கொள்கின்றனர். (பார்க்க;செ.வே.காசிநாதன் 2021).

**மொழி மயக்கம்**

சில ஒற்றுமைகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் விளையாட்டுக்கள் விளையாட்டுக்களாக (ஏற்க) முடியும். இதற்கு 'குடும்ப ஒற்றுமை' எண்ணக்கருவை விட்கன்ஸ்டைன் பயன்படுத்தினார். விளையாட்டுக்களும் குடும்ப ஒற்றுமையும் மொழி செயற்படும் விதத்திற்கான காட்டுருக்களாகவோ உருவகங்களாகவோ அமைந்துள்ளன.

எவ்வாறு மொழி அன்றாடப் பயன்களில் செயற்படுகிறது என்ற அவரது புதிய தேடலின் போது ஒரு சம்பவம் கூறப்படுகிறது. லண்டனில் கட்டிடப் படிக்கட்டில் நின்ற போது ஒருவர் அவரைப் படம் எடுக்க விரும்பினார். 'நான் எங்கு நிற்க வேண்டும்' விட்கன்ஸ்டைன் அவரிடம் கேட்டபோது 'he was told to stand roughly there' (தோராயமாக நீங்கள் அங்கு நிற்கலாம்) என்ற பதில் விட்கன்ஸ்டைனை மேலும் சித்தரிக்கத் தூண்டியது. தான் முன்னர் நினைத்தவாறு மொழிக்கு ஒரு தூய்மை அர்த்தநிலை இல்லை மொழி அதன் அன்றாடச் செயற்பாடுகளில் அது எவ்வாறு செயற்படுகிறது? என்ற கேள்வி முன்னிலைப்படுத்துவது மொழியில் கடினமும் மனக் குழப்பங்களும் அதை நாம் கற்பனை செய்யும் விதத்திலிருந்தே உருவாகிறது.

‘மெய்யியல் என்பது மொழி எமது அறிவாற்றலை மயக்குவதற்கு எதிரான போராட்டம்’ என்பதற்கான அர்த்தத்தை இங்கிருந்துதான் நாம் ஆரம்பிக்கின்றோம்.

விட்கன்ஸ்டைனின் படமொழியில் (Picture language) ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு அர்த்தம் உண்டு அந்த அர்த்தம் சொல்லோடு இணைந்துள்ளது. அந்தச் சொல் அதற்கான பொருளை (object) க் குறிக்கிறது. மொழியூடாக சொல்லுக்கும் பொருளுக்குமிடையில் ஒரு தொடர்பு உண்டு என்று இது கூறுகிறது. இங்கு சொல்லும் அது குறித்து நிற்கும் அந்தச் சொல்லின் அர்த்தம் என்றாகிறது.

பிந்திய – விட்கன்ஸ்டைனின் இக்கோட்பாடு மாறுகிறது. வெவ்வேறு நடைமுறைகளில் அல்லது சூழல்களில் சொற்களின் பயன்பாடு குறித்து அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று விட்கன்ஸ்டைன் கூறுகிறார். நோர்மன் மெல்கமின் பின்வரும் கூற்றை இங்கு நோக்குவோம்.

ஒருமுறை நாங்கள் ஒன்றாக இருந்த போது மெய்யியல் பற்றி விட்கன்ஸ்டைன் வியக்கத்தக்க அவதானிப்சபொன்றை வெளியிட்டார். :

> ‘மெய்யியல் குழப்பத்தில் சிக்கிய ஒரு நபர் வெளியே வர விரும்பினாலும் எப்படி என்று தெரியாது ஒரு அறையில் இருப்பவரைப் போன்றவர். அவர் ஜன்னலைப் பார்க்கிறார். அது மிக உயரத்தில் உள்ளது. அதன் புகைபோக்கியைப் பார்க்கிறார். அது மிகவும் குறுகியதாக இருக்கிறது. ஆனால் அவரால் திரும்பிப் பார்க்கக் கூடுமாக இருந்தால் எல்லா நேரத்திலும் திறக்கப்பட்ட ஒரு கதவு இருப்பதைக் காண்பார். இது அவரது இரண்டாவது நூலான மெய்யியல் ஆய்வுகள் நூலுடன் தொடர்புள்ள கருத்து மெய்யியலில் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது புதிதாக தகவல்களை வழங்குவதன் மூலம் அல்ல’ ஆனால் நாம் எப்பொழுதும் அறிந்திருப்பதை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் விசாரணைகளினாலும் தான் அது நிகழ்கிறது”. (Norman Malcolm, 1967)

‘ஒரு சொல்லைப் புரிந்து கொள்ளல் என்பது மொழியைப் புரிந்திருத்தலாகும். அந்த நுட்பத்தில் தேர்ச்சி பெற்றிருப்பதாகும்.’ (PI, 199) என்ற விட்கன்ஸ்டைனின் கூற்றை நாம் கவனத்தில் கொள்ளலாம். மொழி வெவ்வேறு விதித் தொகுதிகளைப் பெற்றுள்ளது. அந்த விதிகளை, மரபுகளை ஆட்சி செய்யும் சமூகப் பின்னணி உள்ளது மொழியின் பொருள் தெளிவைப் பெற இவை அவதானிக்கப்பட வேண்டும்.

இவ்விதிகள் மனித உணர்வில் செயற்படுகின்றன. பாரம்பரிய முறையில் மொழி விதிகளை நாம் அறிந்திருக்கிறோம். இது நாம் ஒரு விளையாட்டில் பங்கேற்று அதன் விதிகளை அறிந்திருப்பதற்கு ஒப்பானது. மொழிக்கான முன்னோடியாக விதிகள் உள்ளன. நடைமுறையில் இருந்து பேச்சின் அர்த்தங்களை மொழி பெற்றுக் கொள்கிறது.

விதிகளும் சிலவற்றுடன் இணைந்துள்ளன. இங்கு ஒருவர் விதிகளைப் பின்பற்றுகிறார் என்பது அது அவரின் தேர்வு அல்ல அவை அவரால் பின்பற்றப்படுகின்றன. விதிகள் தனித்து நிற்பவை அல்ல. சமூக – மொழியியல் அமைப்பிற்குள் அவை போஷாக்கப்படுகின்றன. மொழிக்கு என ஒரு வாழ்க்கை வடிவம் உள்ளது. மனித வாழ்க்கையோடு பிரிக்க முடியாதவாறு மொழி பிணைக்கப்பட்டுள்ளது. ஒரு வசனத்தைப் புரிதல் என்பது ஒரு இசையின் கருப்பொருளை (Theme) அறிந்து கொள்வதற்கு சமமானது என்று ஒருவர் நினைக்கலாம்.

மொழி விளையாடல் ஊடாகவே மொழியின் விதிகள் என்ற கருத்தாக்கத்தை விட்கன்ஸ்டைன் உருவாக்குகிறார். ஒரு விளையாட்டை சிறப்பாக விளையாட வேண்டுமாயின் எல்லா விளையாட்டுக்களும் ஒரே வகையானது அல்ல என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். வேறுபாடுகளுக்குள் ஒற்றுமைப் பண்புகள் உண்டெனினும் ஒவ்வொரு விளையாட்டுக்கும் என்ற தனித்துவம் உள்ளது. அவரது ‘குடும்ப ஒற்றுமை எண்ணக்கருவில் அதைத்தான் பார்க்கிறோம்.

வெவ்வேறு மொழியாடல்களில் பயன்படுத்தப்படும் மொழியின் விதிகளைப் புரிந்து கொள்வதாகும். விதிகள் வெளிவாரியானதோ அகவாரியானதோ அல்ல எதற்காக அந்தப் பதங்கள் நிற்கின்றனவோ அவற்றிற்கான நிபந்தனைகள் தான் அர்த்தத்தைத் தீமானிக்கின்றன.

அவை சமூகத் தொடர்போடும் நடைமுறைப் பழக்கவழக்கங்களோடும் இணைந்திருப்பவை. கால ஓட்டத்தில் இவை மாற்றங்களுக்கும் உள்ளாகின்றன. வாழ்க்கைக் கோலத்தில் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது. என்பதில்தான் அதற்கான அர்த்தமும் இணைக்கப்பட்டுள்ளது.

மொழி மெய்யியலின் உள்ளக முறைமைகளில் சில குறித்த அம்சங்களை சுருக்கமாக பார்த்தோம். இன்று இவற்றை உங்களுடன் உரையாட கிடைத்தமைக்காக உண்மையிலே நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வாய்ப்பை வழங்கிய உபவேந்தருக்கும், பீடாதிபதிக்கும், நிர்வாகத்தினருக்கும் தொடர்புகளை முன்நின்று சிறப்பாகச் செயற்படுத்திய மெய்யியல் துறைத்தலைவர் திரு. வெ. அழகரரெத்தினம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

## **References**

David G. Stern, (2019) Review on Oskari Kuusela, Wittgenstein on Logic as the method of Philosophy, Oxford University Press.

Samuel E. Stumpf (1994), Philosophy: History and Problems, Mc Graw- Hill, Inc. U.S.A.

Goorge Pitcher (1985), The Philosophy of Wittgenstein, New Delhi.

Merrill B. H. and Jaakko H, (1986), Investigating Wittgenstein, Basil Blackwell, USA.

Philips. A. Griffiths, (ed) (1986), Wittgenstein Centenary Essays, Cambridge University Press, New York.

Anthoney, O'Hear, (1986) Wittgenstein and the Transmission of Traditions **in** A. Philips Griffiths, Cambridge.

Teodoro de la Torre (1988) Popular History of Philosophy, Houston.

Roger Seruton (1984), A Short History of Modern Philosophy: From Descartes to Wittgenstein, ARK paperbacks, London.

Gavin N. Kitching, (2003), Wittgenstein and Society: Essays in Conceptual Puzzlement, Ashgate publishing Company, USA

Norman Malcolm (1966), Ludwig Wittgenstein: A Memoir, Oxford University Press, London.

Direnc Erasahin (2007) An Enquiry on Wittgenstein's Conceptin of Meaning (M.A. Thesis submitted middle East Technical University)

Philip Tonner (2017), Wittgenstein on forms of life: a short introduction, E-LOGOS. doi.org/10.18267/j.e-logos.440

Sketch George Henric Von wright (1955), Ludwig Wittgenstein: A Biographical The Philosophical Review, vol. 64 no 4 (Oct, 1955) Duk University Press.

Ludwig Wittgenstein (1963), Philosophical Investigations, Trans: G.E.M. Anscombe, Basil Blackwell, Oxford.

Bertrant Russell, (1918-19). The Philosophy of Logical Atomism

I K.T. Fann (1969) Wittgenstein's Conception of Philosophy Basil Blackwell, Oxford.

Connor. J.J.O. & E.F. Robertson (2003) 'Ludwig Josef Johnn Wittgenstein, M.T., MacTutor.

Stephen P. Schwarts (2012), A Brief History of Analytic Philosophy: from Russell to Rowls, Wiley Blackwell.

Luthur J. Binsky (1961), Contemporary Ethical Theories, New York

D.J. Sehalkwyl, Ludwig Wittgenstein and Current Theoretical Debate.

Mamani Kalite (2020), Wittgenstein: Concept of Language Games and family Resemblance, in Journal of critical reviews, Vol? Issue, 04.

காசிநாதன் செ.வே. (2021), *விட்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம்இ மனம்.*கிரியா, சென்னை.

அனஸ், எம். எஸ். எம். *மெய்யியலின் பெருங்கனவு: சோக்ரடீஸ்,* அடையாளம், புத்தாநத்தம் திருச்சி, இந்தியா.